# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு2030 புரட்டாதி 10 திங்கட்கிழமை (27-09-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 261


## மேலும் பல புதைகுழிகள் செம்மணியில் இருக்கலாம்!

### தோண்டுதல் பணியைப் பார்வையிட்ட நிபுணர் கருத்து

கொழும்பு, செப். 27

செம்மணிப் பிரதேசத்தில் புதைகுழிகள் இருப்பதாக அடையாளம் காட்டப்பட்டு தோண்டும் பணிகள் இடம்பெற்ற பகுதிகளில் இருந்து சில அடி தூரத்தில் வேறு புதைகுழிகள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளை நிராகரிக்க முடியாது.

இவ்வாறு செம்மணிப் புதைகுழி தோண்டும் பணியில் பார்வையாளராகக் கலந்து கொண்ட மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த நிபுணர் செல்வி மெலிகா கோணேர்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிய மன்றத்தின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவுக் கொலை வழக்கின் மரண தண்டனைக் குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷ பெயர் குறிப்பிட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கை அதிகரிப்பு

கொழும்பு, செப். 27

கொழும்பிலும் அதன் அயற் பிரதேசங்களிலும் நேற்றுக் காலை முதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

முக்கிய சந்திகளில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரும், பொலிஸாரும் வீதிகளில் பயணம் செய்த சகல வாகனங்களையும் சோதனையிட்டனர்.

அடையாள அட்டை மற்றும் பொலிஸ் பதிவுச் சான்றிதழ் வைத்திருக்காதவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கொழும்பிலும் அதன் அயற் பிரதேசங்களிலும் நேற்று கடும் மழை பெய்தது.

மழையின் மத்தியிலும் பயணிகள் பஸ்களில் இருந்து இறக்கப்பட்டு தீவிரசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

## தனியார் பஸ்ஸில் குண்டு வெடித்தது!

### பதுளையில் ஒருவர் பலி 31 பேர் காயமடைந்தனர்

கொழும்பு, செப்ரெம்பர் 27

பதுளை நகரப் பகுதியில் தனியார் பஸ் ஒன்றில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். 31 பேர் காயமடைந்தனர்.

பதுளையில் இருந்து மொனராகலை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் பண்டாரபுர என்ற இடத்தில் சென்று கொண்டிருந்த போது பிற்பகல் 2. 30 மணியளவில் குண்டு வெடித்தது.

காயமடைந்தவர்கள் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களிலில்ஒருவர் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

குண்டை வேறோர் இடத்துக்குக் கொண்டு செல்வதற்காக பஸ்ஸில் எடுத்துச் சென்ற போது அது தவறுதலாக வெடித்திருக்கலாம் என்றும்—

குண்டைக் கொண்டு வந்தவரே உயிரிழந்திருக்கலாம் என்றும்—

அவர் தமிழராக இருக்கக் கூடும் என்றும்— பதுளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குண்டு வெடிப்புத் தொடர்பாக மலையகத்தைச் சேர்ந்த இரு தமிழர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் மோதல்கள்

கொழும்பு, செப். 27

வன்னியின் வடக்குப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதல்களில் ஒரு கடற்படை அதிகாரியும் பொலிஸார் ஒருவரும் உயிரிழந்துள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

அதேசமயம் - நேற்று இடம்பெற்ற பல்வேறு மோதல்களில் 12 புலிகளும் —

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தாக்குதல்களில் 5 புலிகளும் — உயிரிழந்தனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது

(இ-6)

## 1,250 பயணிகள் திருமலையில் காத்திருப்பு

திருகோணமலை, செப். 27

திருகோணமலையிலிருந்து யாழ். செல்வதற்கு ஆயிரத்து 250 பயணிகள் திருகோணமலையில் தரித்து நிற்கின்றனர் என திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 523 பேர் வவுனியா மற்றும் மன்னார் அகதிமுகாம்களில் இருந்து வந்தவர்கள் என்றும்—

10 பேர் களுத்துறைச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இரவு 10 மணிக்குப் பின்னர் புத்தளத்தில் நடமாட தடை

திருகோணமலை, செப். 27

புத்தளம் நகரப் பகுதியில் இரவு 10 மணிக்குப் பின்பு எவரும் நடமாடக்கூடாது என புத்தளம் பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக புத்தளம் நகரப் பகுதியில் இடம்பெற்று வரும் மின்மாற்றித்தகர்ப்புச் சம்பவங்களை அடுத்தே இந்தப் புதிய நடைமுறை செயற்படுத்தப்படுகிறது எனத் —தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தன் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த யுத்த டாங்கி குண்டினால் தகர்ப்பு

### டாங்கி எதிர்ப்பு ஏவுகணையால் புலிகள் தாக்கினரா?

கொழும்பு, செப். 27

ஆனையிறவுக்குத் தெற்கே பரந்தன் பகுதியில் படையினரின் முன்னரங்க நிலைகளுக்கு உள்ளே நிறுத்தப்பட்டிருந்த இரண்டு யுத்த டாங்கிகளில் ஒன்று கடந்த வெள்ளியன்று மர்மமான முறையில் தகர்க்கப்பட்டிருக்கின்றது.

அன்று காலை 10-30 மணியளவில் படையினர் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் இந்த இரு டாங்கிகளும் அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தன என்றும்—

அந்தச்சமயம் விடுதலைப் புலிகளால் ஏவப்பட்ட இரண்டு 120 மில்லிமீற்றர் மோட்டார் ஷெல்கள் அப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன என்றும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகளின் மோட்டார் ஷெல் தாக்குதல்களில் படையினர் எவரும் காயமடையவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஷெல்கள் வீழ்ந்து வெடித்தவுடன் பெரும் தீப்பிளம்பு தோன்றியதாகவும்—

அதனையடுத்து டாங்கிகளில் ஒன்று சேதமடைந்ததை அவதானித்த படையினர்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## இரு அமைச்சர்கள் இன்று அஷ்ரப்பைசந்திக்கின்றனர்

### இணக்கம் ஏற்படுத்த முயற்சி!

கொழும்பு, செப். 27

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம் எடுத்திருப்பதை அடுத்து விவசாயம், காணி அமைச்சர் டி. எம். ஜயரத்தின, மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா ஆகியோர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப்பை இன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை

### 1000 ஊர்காவல் படையினர் புதிதாகத் திரட்டப்பட்டனர்

மட்டக்களப்பு, செப். 27

கிழக்கு மாகாணத்தில் எல்லைப்புற சிங்களக் கிராமங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக புதிதாக ஆயிரம் ஊர்காவலர்கள் திரட்டப்பட்டுள்ளனர்.

கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் பத்மஸ்ரீ லியனகே இதனைத் தெரிவித்தார்.

கடந்த 18 ஆம் திகதி அம்பாறை மாவட்ட எல்லைப்புறமான புஞ்சிகிரியா என்னும் இடத்தில் மூன்று கிராமங்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியதை அடுத்து உடனடியாக இந்தநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, கந்தளாய் ஆகிய பகுதிகளின் எல்லைப்புற பாதுகாப்பு நடவடிக்கைகள் நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் 250ஊர்காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் காவலரண் மீது தாக்குதல்

கொழும்பு, செப். 27

அம்பாறை வசியெல்ல, மிகிலந்த என்ற இடத்தில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் —

இந்தத் தாக்குதலில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் —

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-6)

## ஏறாவூரில் உழவு இயந்திரம் கடத்தல்

மட்டக்களப்பு, செப். 27

மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேச சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரம் ஒன்று நேற்றுக்காலை இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## மரியார் கிருஷ்ணன்

மாவை கலட்டி தெல்லிப்பழையை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவரும், ஓய்வுபெற்ற சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியருமான மரியார் கிருஷ்ணன் 1999-09-26 ஞாயிறு அன்று காலமாகிவிட்டார்.

இவர் திருமதி பூரணத்தின் அன்புக் கணவரும் கி. நீதிராசா (யாழ். பல்கலைக்கழகம்) கி. மகேஸ்வரன் (யாழ்.பல்கலைக்கழகம் 2ஆம் வருடம்), கி.தவரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று பிற்பகல் 5.00 மணியளவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி. நீதிராசா
(மகன்)

பாடசாலை வீதி,
மல்லாகம்.

(69399)

## இராசையா பாலசுப்பிரமணியம்
(முருகானந்தம்)

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பாலசுப்பிரமணியம் பிரான்ஸில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசையா மற்றும் நாகேஸ்வரி (பிரான்ஸ்) தம்பதிகளின் ஏக புதல்வனும் புனிதவதி, புஸ்பவதி (பிரான்ஸ்), விமலாவதி (பிரான்ஸ்), சாந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் துரைராஜசிங்கம் (பிரான்ஸ்), இராசரத்தினம் (பிரான்ஸ்), லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரசன்னா, பிரதீபா, நிசானி, நிருபியா, நிருசன், நிமல், அஜித் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28-9-1999 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புனிதவதி
(சகோதரி)

நீர்வேலி கந்தசாமி கோயிலடி,
நீர்வேலி.

(69353)

## சின்னத்தம்பி நாகலிங்கம்

சரசாலை வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகலிங்கம் 26 - 09 - 99 அன்று அதிகாலை காலமானார்.

இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் கனகரத்தினம் (றஞ்சனாஸ் ரெக்ஸ், சாவகச்சேரி), குலசேகரம் (கல்பனாஸ் ரெக்ஸ், சாவகச்சேரி), ஞானசேகரம் (பூஞ்சோலை ரெக்ஸ், சாவகச்சேரி), சோமசேகரம், கலாவதி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நகுலேஸ்வரி, விஜிதா, ஜெயரஞ்சிதம், அருந்தவநாதன் (தாரகை ரெக்ஸ், சாவகச்சேரி) கேதீஸ்வரி ஆகியோரின் மாமனாரும் தனுராஜ் (யாழ். பல்கலைக்கழக மாணவன்), தசிகரன் (லண்டன்), தர்ஜினி (மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கஜேந்திரன் (மாணவன் சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கோபிகா (மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), முரளி, ஆரபி (நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலய மாணவர்கள்), விதுஷன், வினோதன், சோபிகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்று பூதவுடல் சரசாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(சி/9090)

## வல்லிபுரம் இராசதுரை

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் இராசதுரை நேற்று முன்தினம் 25-09-99 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் சின்னையா இராசலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், வல்லிபுரம் — பத்தினிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், சின்னையா சிதம்பரம் அவர்களின் அன்பு மருமகனும், தெய்வேந்திரம், இராசேந்திரம், யோகேந்திரம் (டென்மார்க்), சிவேஸ்வரி, இராஜேஸ்வரி, அனுசா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பரமேஸ்வரன், பாலச்சந்திரன், உருத்திரானந்தன், செல்வராணி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அன்னம்மா, காலஞ்சென்ற சுப்பையா, காலஞ்சென்ற குலதுங்கம், பொன்னம்மா, திருநாவுக்கரசு, குமாரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தியாகராஜா, காலஞ்சென்ற பஞ்சலிங்கம், கணேசலிங்கம் (கனடா), காலஞ்சென்ற கணேஸ்வரி, சிதம்பரநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயந்தன், நிஷாந்தி, கஜராம், சுஜீபன், ஐந்துஜா, ஆர்த்திகன், சஜானன் (கொழும்பு), தனுஜா, சுபேதினி (டென்மார்க்), யசிந்தன், சுதன், சோபனா, உதயன், ஜீவன், சுரேஸ் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 26-09-99 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ. இராசலட்சுமி
(மனைவி)

இணுவில் மேற்கு,
இணுவில்.

(69398)

# ஜி.சீ.ஈ. (சா.த) மாணவர் நலன் கருதி வலய ரீதியாக விஞ்ஞான ஆய்வுகூடம்

## கல்வி அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, செப். 27

அடுத்த வருடம் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி வலய ரீதியாக விஞ்ஞான ஆய்வு கூடங்களை அமைக்க மத்திய கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக மத்திய கல்வி அமைச்சினால் சகல கல்வி வலயங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராமப் புறப்பகுதிகளில் உள்ள வளம் குறைந்த பாடசாலைகளிலேயே ஆரம்பத்தில் விஞ்ஞான ஆய்வு கூடங்களை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் —

இதன்படி ஒவ்வொரு வலயக் கல்விப் பணிப்பாளரும் தமது வலயத்தின் கீழ் உள்ள வளம் குறைந்த பாடசாலைகளின் பெயர்களை முன்னுரிமை அடிப்படையில் இம்மாத இறுதிக்குள் தத்தமது மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் —

முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கும் போது ஏற்னவே ஆய்வு கூடங்களை உடைய வளம்மிக்க பாடசாலைகளின் பெயர்களை அவற்றில் சேர்க்கக் கூடாது எனவும் —

மத்திய கல்வி அமைச்சு தனது சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளை தீவகக் கல்வி வலயத்தில் விஞ்ஞான ஆய்வு கூடங்களை நிறுவுவதற்கான பாடசாலைகளின் விவரங்களைத் திரட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக வலயக் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-7)

## கச்சேரி நல்லூர் வீதி மோசமான நிலையில்

யாழ்ப்பாணம் கச்சேரி — நல்லூர் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் பாரிய குண்டும் குழிகளுமாகக் காணப்படுவதால் இவ் வீதி வழியாகப் போக்குவரத்தில் ஈடுபடுவோர் விபத்துக்களைச் சந்திக்க வேண்டிய நிலை இருந்து வருகிறது.

பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகனங்கள் மற்றும் சைக்கிளில் செல்லும் பாடசாலை மாணவர்கள், அரச சேவையாளர்கள் எனப் பலரும் அதிகளவில் பயன்படுத்தி வரும் இவ் வீதி திருத்தப்படாத நிலையில் நீண்டகாலமாக இருந்து வருகிறது.

(ஐ-15)

## ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம்

காரைநகர், செப். 27

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

(ஐ-73)

## காணவில்லை

48/01 அம்மன் வீதி
கந்தர் மடத்தைச்சேர்ந்த
ஆ. ஈஸ்வரகுமார்
(சிவா) ஆகிய

எனது வளர்ப்பு பசுவை (கட்டைக்கொம்பு. தனி வெள்ளை, AP குறி உடையது) கடந்த 22-09-99 புதன்கிழமை முதல் காணவில்லை. தகவல் அறிந்தவர்கள் மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும், சன்மானம் வழங்கப்படும்

ஆ. ஈஸ்வரகுமார் (சிவா)

(69402)


**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
விஜய் - ரம்பா
நடித்த
மின்சாரக்கண்ணா
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No. 070-212223
(69290)

**நாகஸ்ஸ்**
சுன்னாகம்
சரத்குமார் – வினித்தா
சுகன்யா – கவுண்டமணி
நடித்த
மகாபிரபு
காட்சிகள்: 11-00, 2-30
(புதிய நேரம்)
(69365)

**ராஜா**
யாழ்ப்பாணம்
இரு தினங்களுக்கு
மம்முட்டி - தேவயானி
மற்றும் பலர் நடித்த
மறுமலர்ச்சி
29-09-99 புதன்கிழமை
முதல்
ரஜனி - குஷ்பு
நடித்த
பாண்டியன்
10-30, 2-30


# மரண அறிவித்தல்கள்

## செல்லையா தியாகராசா
(ஓய்வு பெற்ற 'சுகாதாரத் திணைக்கள இலிகிதர்)

இல. 43/5 யாழ் வீதியைச் சேர்ந்த செல்லையா தியாகராசா 26-09-99 அன்று காலமானார்.

அன்னார் ஓய்வு பெற்ற சுகாதாரத்திணைக்கள இலிகிதரும் வண்ணை ஸ்ரீவெங்கடேசவரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஆதீன மகாசபையின் முன்னாள் செயலாளரும் தற்போதைய நிர்வாகசபை உறுப்பினரும்காலஞ்சென்ற செல்லையா—அம்மணிஅம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கந்தையா செட்டியார் இராசம்மா ஆகியோரின் மருமகனும் சாரதாமணிதேவியின் அன்புக்கணவரும் தவராசாவின் [ஜேர்மனி] சகோதரரும் கமலாதேவியின் மைத்துனரும் அம்பிகைபாகன் சுசிலாதேவி [நோர்வே], தயாபரன் [கொழும்பு], தயாநந்தன் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும் அம்பிகைபாகன், குகநாயகி, மாதங்கி ஆகியோரின் மாமனாரும் சந்திரகுமார், ரவிக்குமார், ஆனந்தக்குமார், ஆனந்தி ஆகியோரின் பெரிய தந்தையும் அர்ஜுன், விருபா, வினுஷா, துவாஹரணி, ஆரபி ஆகியோரின் பாட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சாரதாமணிதேவி
[மனைவி]

43/5, யாழ்வீதி,
யாழ்ப்பாணம்.

[69401]

## சின்னத்தம்பி தங்கராசா

நெல்லியடி கரவெட்டி கிரிப்பல்லி வீதியைச்சேர்ந்த ஓய்வு பெற்ற சித்திர ஆசிரியரும் ஓவியக் கலைஞருமாகிய சின்னத்தம்பி தங்கராசா நேற்று 26-09-99 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் ராஜமணியின் அன்புக் கணவரும். அசோகன் (ஜேர்மனி), மாணிக்கவதி (பிரான்ஸ்), யோகாம்பிகை(ஆசிரியை,வதிரி திரு இருதயக்கல்லூரி), சிவாம்பிகை (ஜேர்மனி), செல்வாம்பிகை, இளவதனி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான லட்சுமிப்பிள்ளை. செல்லம்மா, யோகம்மா, சிற்றம்பலம் (திருகோணமலை), பிறைசூடி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயக்குமார் (பிரான்ஸ்), இராஜகோபால், ஸ்ரீராஜராஜேந்திரன் (ஜேர்மனி), ராஜசேகர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் பிரசன்னா (பிரான்ஸ்), விதுர்சனா (பிரான்ஸ்), ஆகாஷ் (பிரான்ஸ்), அம்பிகா (லண்டன்),சுஜாதா, இராகுலன்,சுபராஜ் (ஜேர்மனி), அனுராஜ் (ஜேர்மனி), உமாசாந்தி (லண்டன்), உஷேந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27-09-99) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சோனப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி இ. யோகாம்பிகை
(மகள்) ஆசிரியை
யா/வதிரி திரு இருதயக் கல்லூரி

கிரிப்பல்லி வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

(சி/9091)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணின் வயிற்றில் சிறிய துவாய் மீட்பு!

குவைத் சிற்றி, செப், 27

பெண் ஒருவரின் வயிற்றில் இருந்து 40 சதுர சென்ரி மீற்றர் அளவுள்ள சிறிய துவாய் ஒன்றை குவைத் டாக்டர்கள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றி உள்ளனர்.

லண்டனில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் சத்திர சிகிச்சையை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய இப் பெண் அடுத்த மூன்று வாரகாலத்தில் கடும் வயிற்றுவலி காரணமாக டாக்டரை நாடியபோது அவரது வயிற்றில் துவாய் இருப்பது தெரிய வந்தது.

குவைத் முபாரக் மருத்துவ மனையில் 'உடனடியாக அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற் கொள்ளப்பட்டு வயிற்றில் இருந்த துவாய் மீட்கப்பட்டது.

(ஐ-9)

## ஆர்ப்பாட்டம் நடத்த இருந்த பாக். எதிரணியினர் கைது!

கராச்சி, செப். 27

பாகிஸ்தானின் கராச்சி நகரில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைநடத்த இருந்த பல நூற்றுக்கணக்கான எதிர்க்கட்சி ஆதரவாளர்களைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

அந்த ஆர்ப்பாட்டம் பிரதமர் நவாஸ் ஷெரீப் பதவி விலக வேண்டும் எனக்கோரி நடத்தப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் கடைசியான தாகும்.

கைது செய்யப்பட்டவர்களில் எதிர்க்கட்சிக் கூட்டணியைச் சேர்ந்த செனட்டர்கள் பலரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் அடங்குவர்.

(ஐ-9)

## தமிழகத்தில் பதிவின்றித் தங்கி உள்ள ஈழத் தமிழர்களைத் திருப்பி அனுப்ப போவதாக எச்சரிக்கை

சென்னை, செப். 27

தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் தமது பெயர் மற்றும் விவரங்களைப் பதிவு செய்யாமல் தங்கியிருக்கும் 28 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளை நாடு கடத்தப் போவதாக இந்திய மத்திய அரசு எச்சரித்துள்ளது.

தமிழகத்தின் அகதி முகாம்களிலும் மற்றும் பல்வேறு இடங்களிலும் வதியும் பெரும் எண்ணிக்கையான இலங்கைத் தமிழர் தமது பெயர் மற்றும் விவரங்களை உரிய இடங்களில் பதிவு செய்யாமல் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரை பதிவுசெய்வதற்கான காலக்கெடு வழங்கப்பட்டும் கூட பலர் பதிவு செய்யாததை அடுத்து இக் காலக்கெடு இம்மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

எனினும் ஆயிரத்து 820 பேர் மட்டுமே தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்துள்ளனர். சுமார் 28 ஆயிரம் பேர் வரையில் பதிவு செய்யவில்லை.

இவ்வாறு பதிவு செய்தவர்களுக்கு அவர் அவர்களது படங்கள் ஒட்டப்பட்ட விசேட பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழகத்தில் 115 இற்கும் மேற்பட்ட முகாம்களில் 73 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளும், முகாங்களுக்கு வெளியே சுமார் 30 ஆயிரம் பேரு வசித்து வருகின்றனர்.

(ஐ-ரி)

★ ஐ. நா. படை - கிளர்ச்சியாளர்கள்

# கிழக்குத் திமோரில் மோதல் நிலைமை!

டிலி, செப்ரெம்பர். 27

கிழக்குத் திமோரில் சுதந்திரத்துக்கு எதிரான இந்தோனேசிய சார்புப் படைகள் பெரும் தாக்குதல் நடத்த அணிதிரண்டு வருவதாக வெளியான தகவலை அடுத்து ஆஸ்திரேலியா தலைமையிலான ஐ. நா. சமாதானப் படையினர் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான இந்தோனேசியப் படையினர் கிழக்குத் திமோரில் இருந்து வெளியேறிவிட்ட நிலையில் ஆயுதங்களுடன் அங்கு தனித்து விடப்பட்டுள்ள சுதந்திரத்துக்கு எதிரான கிளர்ச்சியாளர்கள் ஐ. நா படையினர் மீது தாக்குதல்களைத் தொடுக்கத் தயாராக தலைநகர் டிலிக்கு வெளியே மறைவான ஓர் இடத்தில் ஒன்று கூடி இருப்பதாகவும் —

ஆயுதங்களைக் கையளிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்து விட்டு சண்டையில் ஈடுபட அவர்கள் தயாராகி வருவதாகவும் —

அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்னமும் வெளியேறாமல் இருக்கும் இந்தோனேசியப் படையினர் இவ்வாரம் பலாத்காரமாக வெளியேற்றப் படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அச்சமயம் கிளர்ச்சியாளர்களுடன் இணைந்துகொண்டு அவர்கள் மோதல்களில் ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தலைநகர் டிலியில் அமைதிப் படையினர் முழு உஷார் நிலையில் உள்ள போதிலும் பொதுமக்கள் மத்தியில் பதற்றம் நிலவுகிறது

(ஐ)

## தண்டனை

தெஹ்ரான், செப். 27

ஈரானில் சட்டவிரோதமானது என அதிகாரிகளால் அறிவிக்கப்பட்ட 'ஜிகாத்' என்ற பத்திரிகையின் பிரதம ஆசிரியருக்கு ஈரான் நாட்டு நீதிமன்றம் ஒன்று 9 வருட கால சிறைத்தண்டனைவிதித்துள்ளது.

அத்துடன் இவர் 5 ஆண்டுகளுக்கு செய்தித் தொடர்பு ஊடகத்துடன் தொடர்புடைய தொழில்கள் எதனையும் ஆற்றக் கூடாதெனவும் அந்த நீதிமன்றம் பணித்துள்ளது.

இஸ்லாத்தை அவமதிக்கும் கட்டுரைகளை வெளியிட்டவர் என்ற குற்றச்சாட்டில் அவர்குற்றவாளிஎனத் தீர்ப்பளிக்கப்பட்டதைத்தொடர்ந்து இந்தத் தண்டணை விதிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9)

## மத கன்னியாஸ்திரியை நிர்வாணமாக்கிக்கொடுமை

### பீஹாரில் சம்பவம்

புதுடில்லி, செப். 27

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் சுக்கிராம் மாவட்டத்தில் கிறிஸ்தவ கன்னியாஸ்திரி ஒருவர் மத வெறிக் காடையர்களால் நிர்வாணமாக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டுள்ளார்.

தமிழ் நாடு பாண்டிச்சேரியைச் சேர்ந்த இவர் பீஹார் மக்களுக்கு கல்வி மற்றும் சுகாதாரப் பணிகளை ஆற்றி வந்தார்.

அவரை நிர்வாணமாக்கி அலங்கோலப்படுத்திய மத வெறியர்கள் அவரைத்தகாத பாலியல் செயற்பாட்டினைச் செய்ய வற்புறுத்தியதாகவும் இல்லையெனில் பாலியல் வல்லுறவு கொள்ளப் போவதாக மிரட்டியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விஸ்வ இந்து பரிஷத் அமைப்பைச் சேர்ந்தவர்களே இந்தக் கொடுமையைப் புரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் சிறுபான்மை மதத்தவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருவது குறித்து கவலைகளும் கண்டனங்களும் எழுந்துள்ளன.

(ஐ)

## குழந்தை தப்பியது

ரொரன்றோ, செப். 27

கனடாவில் வான்கூவரிற்கு அண்மையில் உள்ள ஆற்றுப் பள்ளத்தாக்கிற்கு மேலாக கப்பிலோனா தொங்கு பாலத்தின்மேல் இருந்து 200 அடி ஆழத்தில் தவறிவீழ்ந்த ஒன்றரை வயதுடைய குழந்தை தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளது.

பல லட்சம் பேர் வருகை தரும் இப்பாலத்தில் இருந்து தாயின் கைதவறி வீழ்ந்த இக் குழந்தை மரக் கிளைகளால் விழும் வேகம் குறைக்கப்பட்டதால் உயிர் தப்பியது. மீட்புப் பணியாளர்கள் பாறைகளில் ஏறும் கருவிகளைப் பயன்படுத்திக் குழந்தையைக் காப்பாற்றினார்கள்.

[ஐ-ரி]

# அப்பாவி உயிர்களை பலிகொள்ளும் யுத்தத்தை உடன் நிறுத்துங்கள்

## வட பிராந்திய இந்துப் பேரவை ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், செப். 27

அண்மையில் புதுக்குடியிருப்பு அம்பாறைப் பகுதிகளில் அப்பாவிகளான குழந்தைகள், பெண்கள், வயோதிபர் உட்பட பொதுமக்கள் பெருமளவில் அநியாயமாக உயிரிழந்தும் காயமடைந்தும் உள்ளார்கள். இது போன்ற ஆழ்ந்த வேதனைக்குரிய சம்பவங்களுக்குக் காரணமான யுத்தத்தை நிறுத்த ஆவன செய்ய வேண்டும்.

வட பிராந்திய இந்துப் பேரவை மேற்கண்டவாறு ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

இது விடயமாக வடபிராந்திய இந்துப் பேரவை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நாட்டில் தொடரும் யுத்தத்தால் அப்பாவிகளான பொது மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாட்டின் செல்வத்தின் பெரும் பகுதி யுத்தத்துக்காகவும் அழிவுகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

யுத்தம் என்பது முடிவில்லாத ஒரு தொடர்கதையாக அந்தமென்பது தெரியாமல் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எமது நாட்டில் யுத்தம் என்பது வாழ்க்கைக்கான ஒரு வியாபாரம் போல அமைந்து விட்டது. இதனால் நவீன உலகு முன்னோக்கிச் செல்ல நாம் அதிலிருந்து பல நூற்றாண்டுகள் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அப்பாவி மக்கள் கொல்லப்படுவதும் அவர்கள் பாதிக்கப்படுவதும் இந்நாட்டில் சர்வசாதாரண நிகழ்வாகிவிட்டது. புனிதமான பௌத்த தர்மம், யுத்தத்தைக் கைவிட்ட அசோகச் சக்கரவர்த்தியால் அமைதியான அகிம்சை வாழ்வுக்காக இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்து சமய சாஸ்திரங்கள், புனித கிறிஸ்தவம் போன்ற ஏனைய சமயங்களும் அடிப்படையில் அமைதி, அகிம்சைப் பண்புகள் நிறைந்த வாழ்க்கை முறையை வலியுறுத்துகின்றன.

இத்தகைய சிறப்பான தர்மநெறிகள் பின்பற்றப்பட்டும் நம் நாட்டில் யுத்தமும் அழிவுகளும் தொடர்வது பெரும் வேதனைக்குரியது.

பண்டைக் காலத்தில் யுத்தத்தின் போது பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என அந்தணர், ஆனிரைகள் (பசுக்கள்) பெண்டிர், முதியோர், நோயுள்ளோர், குழந்தைகள், என்போர் பாதுகாக்கப்பட்டார்கள். ஆனால் நமது நாட்டில் நடைபெறும் யுத்தத்தில் இவர்கள் பாதிக்கப்படுவது சர்வசாதாரணமாகிவிட்டது.

யுத்தம் தொடர்ந்தால் இவ்வாறான அழிவுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும். எனவே இவை எல்லாவற்றுக்கும் மூலகாரணமாகிய யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை நிலைபெறச் செய்வதன் மூலம் இனிமேலாவது இவ்வாறான நிகழ்வுகள் தொடர்வதைத் தவிர்க்க ஆவன செய்து உதவுமாறு மேன்மை தங்கிய தங்களையும் இதனோடு சம்பந்தப்பட்டவர்களையும் மன்றாட்டமாக வேண்டிக் கொள்வதுடன் இந்தச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய இறையருளுக்காக பிரார்த்திக்கின்றோம்— என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-க)

## நியமனம் கிடைத்தும் கடமை ஏற்காத ஆசிரியர் விவரம்

### கல்வி வலயங்கள் சேகரிப்பு

வலிகாமம் தெற்கு, செப். 27

1996, 1997, 1998, 1999 ஆகிய ஆண்டு காலங்களில் ஆசிரிய நியமனங்கள் பல கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட போதிலும், ஆசிரிய நியமனங்களை ஏற்றுக் கொண்ட பல ஆசிரியர்கள் நீண்டகாலம் தொடர்ச்சியாகப் பாடசாலைகளுக்குச் சமுகம் கொடுக்காமல் உள்ளனர் எனக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளன.

இக் காலகட்டங்களில் பட்டதாரி பயிலுநர்களாக நியமனம் பெற்ற பல பட்டதாரிகளும், தகுதிகாண் ஆசிரியர்களாக நியமனம்பெற்ற பல ஆசிரியர்களும் இவ்வாறு ஆசிரிய கடமை ஏற்றபின் நீண்ட காலம் தொடர்ச்சியாகப் பல காரணங்களை முன்னிட்டு பாடசாலைக்குச் சமுகமளிக்காமல் விட்டுள்ளனர்.

இவ்வாறான ஆசிரியர்கள் பற்றிய விவரங்கள் கல்வி வலயங்களூடாகத் திரட்டப்பட்டு வருகின்றன.

இந்த ஆசிரியர்கள் கடமையேற்ற திகதி, இறுதியாக பாடசாலைக்குச் சமுகம் கொடுத்த திகதி, சமுகம் கொடுக்காமைக்கான காரணங்கள் என்பவற்றை அறிவிக்குமாறு வலயக்கல்வி அலுவலகங்கள் பாடசாலை அதிபர்களைக் கோரியுள்ளன.

(ஐ—152)

## நீதிமன்ற பதிவாளர் சேவையில் பதவிஉயர்வுபெறுவோர் விவரம்

நீதி சேவை ஆணைக்குழுச் செயலாளரினால் நீதிமன்ற பதிவாளர் இரண்டாம் தரத்திற்கு பத்துப் பேர் அண்மையில் நியமனம் பெற்றுள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

கு. சண்முகநாதன் (மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்) ச. கதிர்காமநாதன் (மாவட்ட நீதிமன்றம், மன்னார்) ம. செல்வரத்தினம் (மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை), வீ. நடராஜா (மாவட்ட நீதிமன்றம். ஊர்காவற்றுறை), து. சிறீமோகன் (மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்), து சுரேந்திரன் (மாவட்ட நீதிமன்றம், வவுனியா), த. இராசரத்தினம் (மேல் நீதிமன்றம், மட்டக்களப்பு), சி. சிவகுமார் (மாவட்ட நீதிமன்றம், மட்டக்களப்பு), எம் ஐ. எம் அஸ்கர் (மாவட்ட நீதிமன்றம், திருகோணமலை), கே. பிரேமச்சந்திரன் (மாவட்ட நீதிமன்றம், அம்பாறை) (ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கோபாலசிங்கம் கிரிகரன் ஆகிய எனது தேசிய, விசேட வேலை, பாஸ் என்பன (790823792 V) நாவாந்துறைக்கும் யாழ். சிவன் கோயிலடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கிருபா வீடியோசென்ரர், கண்டிவீதி, அரியாலை என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (69393)

இணுவிலிலிருந்து கே. கே. எஸ். வீதி, கந்தர்மட ஒழுங்கை வழியாக நல்லூர் சட்டநாதர் கோயிலுக்கு வரும் வழியில் ஒன்றரைப் பவுண் நிறையுடைய கைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் த. மகேந்திரன், அண்ணா சனசமூக நிலையம், உடுவில் கிழக்கு, இணுவில் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி/9086)

தங்கராசா பரமானந்தம் ஆகிய எனது விசேட அடையாளஅட்டை (0905020641) பண்டத்தரிப்பில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ரட்ணா உ வகம், பண்டத்தரிப்பு என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (69378)

செல்லத்துரை லலிதாம்பாளின் தேசிய, விசேட அடையாள அட்டைகள் மற்றும் செல்லத்துரை விஜிதரனின் விசேட அடையாள அட்டையும், புத்தூருக்கும், ஆவரங்காலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்தயவுசெய்து அற்புததேவன் உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். (சி/9088)

தம்பி ஐயா கணேசலிங்கம் ஆகிய எனது தேசிய, விசேட தொழில் அடையாள அட்டைகள் (613210687 V 0903000850) இருபாலைச் சந்திக்கும், கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (69379)

### SCIENCE/MATHS

English 99 O/L பரீட்சையில் உயர்ந்த பெறுபேறடையவும் ஆண்டு 6, 9, 10 அனுபவமுள்ள ஆசிரியரினால் கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு: ஆசிரியர், 85, சிவன்கோயிலடி (சிவன்கோயில் பின்புறமாக) திருநெல்வேலி. (69381)

### விண்ணப்பப்படிவம்

அமெரிக்கா விசாப்படிவம், விவரம் அனுப்பும் உறை என்பன விற்பனையாகின்றன. தபாலில் பெறுவதாயின் ரூபா 15 அனுப்பவும். நாயகபாலன் மானிப்பாய். (69289)

### மணமக்கள் தேவை

எம்மிடம் உள்நாட்டுவெளிநாட்டு மணமக்கள் உண்டு. குறிப்பு, படத்துடன் செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணி முதல் 5 மணிவரை தொடர்பு கொள்ளவும். ஸ்ரீமுருகன் சோதிட நிலையம். நல்லூர் வடக்கு வீதி, நல்லூர். [69364]

### விற்பனைக்கு

6 இஞ்சி 1 அடி கல்லும், 18 இஞ்சி 1 அடி கல்லும் [பூச்சு தட்டிய பழைய கல்], உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: சின்னவி கந்தசாமி, நாச்சிமார் கோயிலடி, நவாலி வடக்கு, மானிப்பாய். [69389]

### கைரேகை

மெஞ்ஞான முறைப்படி தெய்வீக அருளால் உங்கள் குறைகள் தீர்த்துத் தரப்படும். தீராத நோயா, கிரக தோசத்தால் கஷ்டமடைகின்றீர்களா? எதுவானாலும் தெய்வீக அருளால் குறைகள் தீர்க்கப்படும். தொடர்பு: சி. சோதிநாகரத்தினம், மெய்கண்டான் வீதி, இளவாலை வடக்கு, இளவாலை. [பஸ் இலக்கம் 788]. (69330)

### விற்பனைக்குண்டு

அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டதும், குறைந்த பாவனையில் இருந்ததுமான ம. எ. கொண்டா (Honda) 2'' நீர்இறைக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். சாம்பசிவம் 5ஆம் லேன், மானிப்பாய் வீதி, உடுவில். (மருதனார் மடம் சந்தியிலிருந்து ½ மைல் தொலைவு). (69387)

### மணமகள் தேவை

1969 விசாகம்1, செவ்வாய்க் குற்றமற்ற, ஆங்கில ஆசிரியருக்கும் 1969 ஆயிலியம் கொம்பியூட்டர் ஆசிரியருக்கும் 1964பூராட நட்சத்திர ஆசிரியருக்கும் மணப்பெண்கள் தேவை. தற்போது எடுத்த புகைப்படத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி M S. சரவணபவன், கைதடி தெற்கு, கைதடி. (69380)

### கலர் மீன்

கலர் மீன்கள், மீன் தொட்டிகளுக்குரிய அழகு பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:— A அருளானந்தம் (குட்டி), 17, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (12 மணிக்குப்பின் தொடர்பு கொள்ளவும்.) (69350)

### வீடு வாடகைக்கு

பெற்றோருடன் கூடிய மாணவ மாணவிகளுக்கு சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: 547, பருத்தித்துறை வீதி, நல்லூர். (69359)

### தில்லை சோதிடம்

இந்தியாவில் கடலங்குடியில் சோதிடக் கலையைக் கற்றவரும் திரு. ஜி. பார்த்தசாரதியின் மாணவியுமான ஸ்ரீ அன்புஜெயவதனி என்பவரிடம் ஜாதகம் பார்த்தல், ஜாதகம்எழுதுதல், திருமணப் பொருத்தங்கள் பார்த்தல் போன்றவற்றைப் பார்த்து உங்கள் வாழ்வு நலம்பெற தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: அ. தில்லையம்பலம் (கரைப்பிட்டி விநாயகர் கோயில் அண்மை) அராலி தெற்கு, அராலி. (69288)

### O/L கணிதம் 99

Distinction பெறுபேறடைவதற்காக அண்டசராசர முறையில் ஆரம்ப அறிவினை 2 மணித்தியாலத்தில் நிறைவேற்றப்பட்டு சகல அலகுகளையும் கற்பித்து மீட்டலுடன் வினாவிடை வகுப்புக்களும் 40 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (69315)

### வீடு விற்பனைக்கு

நல்லூர் 406, பருத்தித்துறை வீதியும், வைமன் வீதியும் சந்திக்கும் இடத்தில் 1½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு:— செ. அமரசிங்கம், 465/3, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (69281)

மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் வீடு (5 அறைகள் terrazzo தளமிடப்பட்டது, நீர்த்தாங்கி, இணைந்த குளியலறை வசதிகளுடன்) 18 பரப்புக் காணியும் பயன்தரு மரங்கள் கொண்டதும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. ஸ்ரீகதிர்காமநாதன், ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம் அல்லது கேணியடி ஒழுங்கை, மீசாலை மேற்கு, மீசாலை. [69338]

### மணமகன் தேவை

யாழ். றோமன் கத்தோலிக்கமத கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 29 வயதுடைய ஆசிரியையாகக் கடமைபுரியும் அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 949, C/o உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (69324)

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 28 - 8 - 99 இல் மரணமடைந்த
எமது சங்க உறுப்பினர் - அமரர்

**வினாசித்தம்பி தங்கராசா** (படக்கடை)

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

(69395) புலோலி வணிகர் சங்கம்


இதோ அறிமுகப்படுத்துகின்றோம்!

## ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாராவின் உணவுப் பெட்டிகள்

ஆம்! முதல் தடவையாக ஜெசித்தாராவின்
உணவு வகைகளை பெட்டிகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
சுகாதாரமான, சுத்தம் நிறைந்த
கோழி, ஆட்டிறைச்சி புரியாணி வகைகளை
(F) பிறைட் றைஸ் லாம்பாரிஸ் மற்றும்
இறைச்சி, மீன், இறால், மரக்கறி உணவு வகைகளை
பெட்டிகளில் தினமும்
நண்பகல் 12.00 மணி முதல் 3.00 மணிவரை
சுடச்சுடப் பெற்றுக்கொள்ளலாம்.
ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்யலாம்.

## ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உருகள் விருந்தகம்**

சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குழி.

" புது யுகத்தில் புது உருவம் ஜெசித்தாரா"

(சி/9054)


## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## விற்பனைக்கு

எமது சங்கத்தில் இரண்டு கடா ஆடுகள் விற்பனைக்கு உண்டு. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 10.00 — 12.00 மணிவரை சங்கக் காரியாலயத்தில் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

— பொது முகாமையாளர்

[சி/9082]


## விற்பனைக்கு உண்டு

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையில் புதிதாக அமைக்கப்பட்ட
எல்லா வசதிகளுடனும் கூடிய

**அரிசி குற்றும் கோட்டா மில்**

ஒன்று விற்பனைக்கு உண்டு.
சைனா பொலிசர், இரண்டு சோமசிறி உடைக்கும் மிசின்
செப்பரேட்டர், புதிய ராங்கும் உள்ளது.

தொடர்புகளுக்கு:-
கா. வேலாயுதம் (அப்புத்துரை)
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. (69375)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் ஹரிப்பிரியன்

**27 - 09 - 1999**

அனலைதீவைச் சேர்ந்த
**ஹரிகரசுதசர்மா - ஷோபனா தம்பதிகளின்**
செல்வப் புதல்வன் ஹரிப்பிரியன்

தனது முதலாவது பிறந்தநாளைக் கோண்டாவில் பூதவராயர் கோயிலடியில் உள்ள தனது பேரனாரின் இல்லத்தில் (27—09—99) இன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பூட்டன்மார், பூட்டிமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எல்லாம்வல்ல கோண்டாவில் பூதவராயர் திருவருளாலும் அனலை ஐயனார் திருவருளினாலும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ்கவென்று வாழ்த்துகிறார்கள்.

- ஹரிகரசுதசர்மா தம்பதிகள்.

(சி/ 9071)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

**27 - 09 - 1999**



## செல்வி யசிகா

துணவி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த
**அருளானந்தம்-விஜயராணி தம்பதிகளின்**
செல்வப் புதல்வி யசிகா

தனது முதலாவது பிறந்தநாளை இன்று(27—09—99) தனது இல்லத்தில் வெகு சிறப்பாக கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணாமார், அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, சித்தப்பாமார், சித்திமார், மாமன்மார் மற்றும் நண்பர்கள் நல்லூர்க் கந்தன் அருளுடன் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

திரு. அருளானந்தம்.
துணவி, வட்டுக்கோட்டை. (69383)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி. கிழக்கு தென் பகுதி ப. நோ கூ. சங்கம்,

நீர்வேலி.

114. 08 – 108 / 81

114. 10 – 165 / 88

### செயலாளர் பதவிக்கான

# விண்ணப்பம் கோரல்

ஷெ பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்டத்திலுள்ள கீழ்க்காண் தகைமை கொண்ட ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு திகதி 11—10—99 விண்ணப்பங்கள் யாவும் ''பொது முகாமையாளர், வலி. கிழக்கு தென் பகுதி ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றேல் பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். சங்க எல்லைப்பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்,

விண்ணப்பப்படிவத்தினை ரூபா 5/- செலுத்தி தலைமைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளவும்.

சம்பளத்திட்டம்: 165/88 —10— சு. நி. 31/97ற்கமைய
3100 — 4900
8010 — 10010

வயதெல்லை: 18 தொடக்கம் 45 வருடங்கள் (183/90 சுற்றறிக்கைகமைய) சங்கப்பணியாளருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

தகைமைகள்:

அ) 9 ஆவது சம்பளத்திட்டத்தில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ள காரியாலய உதவியாளர்/அங்கத்துவ உறவு உத்தியோகத்தர் பதவி வகிக்கும் கூட்டுறவுப்பணியாளர் அல்லது 10 ஆவது சம்பளத்திட்டத்தில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ள காரியாலய உதவியாளர்/அங்கத்துவ உறவு உத்தியோகத்தர் பதவி வகிக்கும் கூட்டுறவுப்பணியாளர்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர் அல்லது ஒத்த தராதரம் உடையவர்.

அல்லது

இ) பட்டய செயலாளர்/நிர்வாகத்தினர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத செயலாளர் வேலையில் அனுபவமுள்ளவர்.

அல்லது

கூ.ப.த.ப,(உயர்தரம்) சித்தி/க.பொ,த.ப (உயர்தரம்) இல் 3 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தில் செயலாளர் வேலையில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ளவர்.

பொது முகாமையாளர்.

நீர்வேலி,
1999—09—22

(சி/9062)

---

## உள்ளூர் கோழித் தீவனம்

கோப்பாய், செப். 27

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் கோழித் தீவனங்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து அவற்றுக்கு மாற்றீடான கலவை உணவு தயாரிக்கும்முறையை கால்நடை வைத்தியசாலை வெளியிட்டுள்ளது.

அதிகளவில்தட்டுப்பாடாக காணப்படும் புறொய்லர் ஸ்ராட்டருக்கான மாற்றீட்டுத்தீவனமாக25 கிலோ முட்டையிடும் கோழிக்குஞ்சுத் தீவனத்துடன் 1.5 கிலோ சோளம், 250 கிராம் மீன் தூள், 1.5 கிலோ எள்ளுப் பிண்ணாக்கு, 250 கிராம் ஹேக்குற்றின்பவுடன் ஆகிய வற்றை கலந்து வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-72)

---

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2ஆம்
குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459

(68982)

---

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

### பாவிக்கப்பட்ட பொருள்களை விற்பதற்கான

# கூறுவிலை கோரல்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ். மாவட்ட அலுவலகத்தினால் பாவிக்கப்பட்ட கீழ்க் காணப்படும் பொருள்களை விற்பதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. இப் பொருள்களை வாங்க விரும்புவோர் பொருளின் ஒன்றுக்கான கூறுவிலையைக் குறிப்பிட்டு 11—10—99 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் மாவட்ட முகாமையாளர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அனுப்பப்படும் தபாலில் இடது பக்க மூலையில் '' கூறுவிலை கோரல் விண்ணப்பம் '' எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

கூடிய விலையைக் கோரும் விண்ணப்பதாரிகளுக்கே பொருள்கள் விற்கப்படுவதுடன் விற்பதற்கான விலையினை நிர்ணயிக்கும் உரிமை எமது அலுவலக விற்பனை விலையை நிர்ணயிக்கும் குழுவிற்கே உரியது.

வாங்கப்படும் பொருள்கள் அறிவித்தல் கிடைத்து பத்து நாள்களுக்குள் முழுப்பெறுமதியையும் செலுத்தி களஞ்சியத்திலிருந்து கொண்டு செல்லப்படல் வேண்டும். பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் 7,8/10/99 ஆகிய இரு தினங்களில் காலை 9. 30 இல் இருந்து 11 மணிவரையும் மாலை 2 மணியளவிலிருந்து 3. 30 மணிவரையும் பார்வையிடலாம். கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் 15—10—99ஆம் திகதி காலை 10.30 மணியளவில் விற்பனை விலையைத் தீர்மானிக்கும் குழுவினால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அத் தினத்தில் விண்ணப்பதாரிகள் சமுகமளிக்கலாம்.

பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் குறிப்பிட்ட பொருளின் முழு எண்ணிக்கையையும் பெறுபவராக இருக்க வேண்டும்.


| விற்பனை செய்யவுள்ள பொருள்களின் விவரம் | தொகை விவரம் |
|---|---|
| 1. அஸ்பெஸ்ரஸ் சீற் ( 8' 0'' ) | 20 |
| 2. சீலிங் பான் (உஷா) | 24 |
| 3. கோஸ் பைப் (அல்கதின்) | 40 |

சு. மாசிலாமணி
மாவட்ட முகாமையாளர்
தே. வீ. அ. அ. சபை,
மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.

(69348)

---

## கண்ணீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்



### அழகரத்தினம் தனராஜன்

16–09–99 வியாழன் ஜேர்மனியில் அகால மரணமான எமது அன்புச் சகோதரன் தனராஜின் அந்திமக் கிரியைகள் 27 – 09 – 99 திங்கள் (இன்று) ஜேர்மனியில் நடைபெறுகின்றன. அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் துயரச் செய்தி கேட்டு நேரில் வந்தும் பிறவழிகள் மூலமும் எமது துயரத்தில் பங்கு கொண்டு எமக்கு ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களாம் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

லெனின்ராஜா – சத்தியராஜா,
( சகோதரர்கள் )

கே. கே. எஸ் வீதி,
கோண்டாவில் மேற்கு.

(69377)

---

எமது உள்ளக் கோயிலின் தெய்வமே!

## தங்களது முதலாம் ஆண்டில் எங்களது நினைவலைகள்

வையகப் பூவாக
08 – 01 – 1935



வானகச் சுடராக
07 – 10 – 1998

## அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை

(Retired Police Inspector)

திதி: 27-09-1999

கதறிநாம் அழுதழுது கண்களைக் குளமாயாக்கி
பதறிநாம் ஏங்கிடவா புவிவிட்டுச் சென்றிட்டீர்கள்
ஒளிதந்து எங்கள் வீட்டை ஓங்கிட வைத்தநீங்கள்
பழிவந்து எம்மைச்சூழ்ந்து பாதகம் விளைத்திடவா
எம்மனை அகன்றிட்டீர்கள் எங்களை வெறுத்திட்டீர்கள்
எவ்வினை நாங்கள் செய்தோம் ஏக்கந்தான் எமக்கு இனி
சண்முகப் பெருமான்பாதம் சந்ததம் வேண்டிநீங்கள்
எம்முகம் காணவந்து தரிசனம் தந்திடுங்கள்.


மனைவி: இராஜேஸ்வரி
பிள்ளைகள் செல்வமேனன் (லண்டன்) செல்வரமேஷ் (லண்டன்)
மருமகள் சுகிர்தா (லண்டன்)

நுணாவில்,
சாவகச்சேரி.

(69296)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 28 |
| — | — |
| 08 | 08 |
| — | — |
| 1934 | 1999 |

அமரர் **கணவதி மார்க்கண்டு**

[ஓய்வுபெற்ற இ. போ. ச. சாரதி - காரைநகர் சாலை]

நிழலாக நீர் இருந்தீர்
நிம்மதியாய் நாம் இருந்தோம்
நிழலும் மறைந்தது அப்பா
நிம்மதியும் குலைந்தது அப்பா
நீங்காத துயரம் தந்து
நீண்ட துயில் கொண்டீரோ!
ஆண்டு பல சென்றாலும்
ஆறாதப்பா இத் துயரம்

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியையும், மதிய போசனமும் எமது இல்லத்தில் இன்று (27 - 09 - 99 இல்) நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(69376)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **அன்னம்மா சபா. ஆனந்தர்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 — 04 — 1920 | 17 — 10 — 1997 |

திதி: துதியை 27 — 09 — 99 திங்கள்

''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ இம்மாநிலத்தே!''

தங்கள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் 'நீங்கள் எம்மை வாழ்நாள் முழுவதும் இறையருளோடு ஆசி கூறி வழிநடத்தும் வண்ணம் பிரார்த்திக்கின்றோம்.

ஆசி வேண்டி நிற்கும்
மகள்: திருமதி அருந்ததி ஆனந்தகௌரி தேவராசா,
மகன்மார், மருமக்கள், பேரர்கள், உற்றார், உறவினர்.

''ஸ்ரீசாலினி''
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

சாலினி தொலைத் தொடர்பு சேவைகள்,
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.
தொலைபேசி:– 070. 212367.

(69384)

## உடற் கல்வியியல் துறைக்கு தெரிவான மாணவர் விவரம்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். பல்கலைக்கழக உடற் கல்வியியல் துறையில் புதிய கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரங்கள் விளம்பரப் பலகையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும்—

தெரிவான மாணவர்களுக்குரிய கடிதங்கள்தனித்தனியே சுயவிலாசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

சம்பந்தப்பட்டவர்கள் அடுத்தமாதம் 5ஆம் திகதிக்கு முன் தமது பதிவினை மேற்கொள்ள வேண்டுமெனவும்—

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை—

உடற்கல்வியியல்துறையைச் சேர்ந்த மாணவர்கள் அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முன்பாக தமது பதிவினை மீள் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனவும் துணைவேந்தர் மேலும் தெரிவித்தார்.

(ஐ–7)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், செப். 27

கோப்பாய் பிரதான வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மினிபஸ், மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவரான, பருத்தித்துறையைச் சேர்ந்த அம்பிகைபாகன் மதிவதனன்(வயது25) என்பவரே காயமடைந்தவராவார். இவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ–15)

## குற்றச் செயல்கள் அதிகரிப்பு

கொழும்பு, செப். 27

நாட்டில் உள்ள பொலீஸாரில் 40 சத வீதமானவர்கள் வடக்கு — கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுவதால் நாட்டின் ஏனைய பகுதிகளில் குற்றச் செயல்களைத் தடுப்பதிலும் அமைதியை ஏற்படுத்துவதிலும் கடும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு இவ்வாறு தெரிவித்தார்.

யுத்த நடவடிக்கைகளில் பொலீஸார் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இதனால் நாட்டில் குற்றச் செயல்கள்பெருகிவருகின்றன.

தற்போதுள்ள நிலையில் குற்றச் செயல்களைத் தடுப்பதற்குப் பொலீஸாரின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை.

எனவே பொலீஸாரின் எண்ணிக்கை உடனடியாக அதிகரிக்கப்பட வேண்டும். புதியவர்கள் பொலீஸில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ–6-21)

## பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 27

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 'இன்ரறக்ட் கழகம்' நடத்தும் வருடாந்த பொது அறிவுப் போட்டி இன்று திங்கட்கிழமை பி. பகல் 1.30 மணிக்கு பின்வரும் நிலையங்களில் நடைபெறும்.

மருதனார்மடம் யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி.

(ஐ–ரி)

# வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் 17 வருட காலமாக
கணித ஆசிரியராக சேவையாற்றிய

**திரு. பொ. பேரின்பநாதன்**

அவர்கள் முதன்மை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை மனமார வாழ்த்துகின்றோம். அவரின் கல்விப்பணி மேலும் வளர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
ஊழியர்கள், மாணவர்கள்.

யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி,
உரும்பிராய்.

(சி/9055)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 | 28 |
| — | — |
| 03 | 08 |
| — | — |
| 1924 | 1999 |

அமரர் **முத்து வெற்றிவேலு**

(முன்னாள் சாரதி, இ. போ. ச.)

காலம் கடந்தாலும் உங்கள்
நினைவு என்றென்றும் எங்கள்
மனதில் இருந்து அகலாது!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(69390)

# 90 ஆம் நாள் நினைவு முத்துக்கள்



**செல்வி ஜீத் சிவசத்தியபாலன்**

(யாழ். யூனியன் கல்லூரி மாணவி, ஆண்டு 11 A)

| மண்ணுலக சஞ்சாரம் | விண்ணுலக சஞ்சாரம் |
|---|---|
| 03 - 03 - 1983 | 30 - 06 - 1999 |

திதி: 27 – 09 – 1999

பாசமிகு மகளே பாரினிலே
தேசுடனே வாழவந்த நீ
காற்றுடனே கலந்ததென்ன அதனால்
தேற்ற வழி இன்றித் தவிக்கிறோம்.
கூற்றுவன் இழைத்த கொடுமை
மாற்றுவழி இன்றித் கவல்கின்றோம்
விண்ணில் ஒளிரும் ஒளி விளக்கே
நின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், பேரன். பேர்த்தி,
சகோதரன், சகோதரி.
உற்றார், உறவினர், நண்பர்கள்.

அம்மன் கோயிலடி,
சூராவத்தை,
சுன்னாகம்.

(சி/9033)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஐ. நா. வின் தலையீடு

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டுத் தீர்வு காண்பதற்கு உதவ வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இதனை வலியுறுத்தி உள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, தொடர்ந்து நடைபெறும் போரை முடிவுக்குக் கொண்டு வருவது ஆகிய இரண்டினையும் அடைவதற்கு மூன்றாந் தரப்பு மத்தியஸ்தரோ அல்லது தொடர்பாளரோ (Facilitator) தேவை என்ற நிலை அனேகமாக முற்றிவிட்டது.

ஆனால் அரசாங்கம் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை நிராகரித்துவிட்டு அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டுவருவதாகக் கூறிக்கொண்டே, போரைத் தொடர்கிறது. மேலும் இப்போது, எல்லாவற்றையும் விட, தேர்தலிலேயே அதிக அக்கறையும ஆர்வமும் காட்டுகிறது,

இத்தகைய ஒரு பின்னணியில், இன விவகாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிபபும் ஈடுபாடும் தேவை என்ற கோரிக்கை ஆசியப் பிராந்திய நிறுவனம் ஒன்றினால முன்வைககப்பட்டிருககிறது.

ஐ. நாவின் பங்களிப்பு ஏன் அவசியம் என்பதற்கு அந்த ஆணைக்குழு மூன்று பிரதான காரணங்களைச் சுட்டிக்காட்டி இருக்கிறது.

★ அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகள் உண்மைத்தன்மை அற்றவை. ஐ நா. பங்களிப்பு இலலாமல் நடைபெறும் பேச்சுககள் வெறும் பேச்சுக்களாகவே அமையும்; போர் தொடர்ந்து கொண்டிருக்கும். ஐ.நா. பங்களிப்பு இல்லாத பேச்சு வெற்றுவேட்டாகவே இருக்கும்; வெற்றி அளிக்கும் வாய்பபு மிகக் குறைவு.

★ அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நிறைய, மிகப் பெரிய அளவில் அவநம்பிக்கைகள் உண்டு. இந்நிலையில் விடுதலைப்புலிகளை ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு பேச்சுக்கு வருமாறு நிபந்தனை விதித்துக் கொண்டு அரசு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தையும் நிராகரிக்கிறது. மூன்றாந்தரபபு தொடர்பாளர் மூலம பேச்சு நடைபெற்றால் அது வெறும் பம்மாத்தாகவே இருக்கும்.

★ அரசாங்கம் லேசர் குண்டுகள், எலக்ரோனிக் ஆயுதங்களைப் பயன்படுத்திப் போரை உயர் தொழில்நுட்பம் வாய்ந்ததாக மாற்றப்போகிறது. இதனால் போரினால் இபபோதுள்ளதைவிட பெரும் அழிவுகள் உண்டாகப்போகின்றன. இலங்கையின் அண்டை நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் அணு ஆயுத வல்லமை உடையனவாக மாறிவரும் வேளையில், இலங்கையில் தொழில்நுட்பப்போர் என்பது அந்தப் பிராந்தியத்தில் பெரும் பதற்றத்தையும் அழிவுகளையும் கொண்டு வரும்.

ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டும் காரணங்கள் நிராகரிக்கக் கூடியவை அல்ல; பொருத்தமானவையே.

பிரஸ்தாப ஆணைக்குழுவைத் தொடர்ந்து மேலும் பல அமைப்புக்கள் ஐ.நா. பங்களிப்புக்கு – தலையீட்டுக்கு – ஆதரவாக கருத்துத் தெரிவிக்கத் தொடங்கும். அரசு இனி என்ன சொல்லப்போகிறது? செய்யப் போகிறது?

# புத்தூர் கிழக்கில் போஷாக்கு ஆய்வு

வலி.கிழக்கு, செப். 27

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புத்தூர் கிழக்குப் பகுதியில் போஷாக்கு நிலை தொடர்பான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட உள்ளது.

அண்மையில் கொழும்பில் போஷாக்கு நிலையை மேம்படுத்துதல் தொடர்பாகப் பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ள ஐவர் கொண்ட குழுவினர் இந்த ஆய்வினை மேற்கொள்ளவுள்ளனர்.

இக்குழுவினர் புத்தூர் கிழக்குப் பகுதிக்குச் சென்று கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள்,சிறுவர்கள் ஆகியோரின் போஷாக்கு நிலையை நேரில் ஆய்வு செய்து குறைபாட்டை நீக்குவதற்கான உடனடி நடவடிக்கையில்ஈடுபடுவர் என பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை —

இக்குழுவினரின் ஆய்வுப் பணி மேலும் போஷாக்குக் குன்றிய பல பகுதிகளுக்குக் கட்டம் கட்டமாக விஸ்தரிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ-180)

## உள்ளூர் வலம்

'மனித சஞ்சாரமற்ற யுத்த வலயத்துள் மீண்டும் மலர்ந்த அறிவுச்சோலை' என்ற தலைப்பில் நேற்றைய உதயனின் உள்ளூர் வலம் பகுதியில் வெளியான கட்டுரையில் சில பந்திகள் தவறுதலாக இடம்மாறி உள்ளன.

8 ஆவது பந்தி முதல் 12 ஆவது பந்தி வரையான பகுதி முழுவதும் கட்டுரையின் தொடக்கத்தில் இடம்பெற்றிருக்க வேண்டும்.

வாசகர்கள் இதனை கவனத்தில் கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம். (ஆ-ர்)

## அதிகாரிகள் குழு அனலைதீவு விஜயம்

நெடுந்தீவு, செப். 27

அனலைதீவுப் பகுதியில் உள்ள குளங்கள், அணைக்கட்டுகள், பாடசாலைகள் திருத்த வேலைகளை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் பிரதிநிதிகளும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகமும் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டனர். (ஐ-111)

# வலி. வடக்குப் பகுதியில் நுளம்புகள் பெருக்கம்

வலி. வடக்குப் பகுதிகளில் நுளம்புத் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது.

1992 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக இப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் முற்றாக வெளியேறி இருந்தனர். பின்னர் 1997 ஆம் ஆண்டுப் பிற்பகுதியில் சில பகுதிகளில்மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட போதிலும் இதுவரை மக்கள் சரி வரக் குடியமராத நிலையில், வளவுகள் பற்றைகளால் நிரம்பிக்காடுகள் போலக் காணப்படுகின்றன. இது நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நுளம்பின் பெருக்கத்தால் மலேரியாவினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் இப் பகுதிகளில் அதிகரித்துள்ளது. (ஐ-13)

## 3 தினங்கள் முத்தமிழ் விழா

வலி. கிழக்கு, செப். 27

கோப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் நடத்தப்படும் முத்தமிழ் விழா அடுத்தமாதம் 15 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் மூன்று இடங்களில் நடத்தப்பட உள்ளது.

15 ஆம், திகதி புத்தூர் சோமஸ்கந்தக்கல்லூரியிலும்–

16 ஆம் திகதி உரும்பிராய் அன்னை பூபதி கலையரங்கிலும் —

17 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் —

விழா நடைபெறும். மூன்று தினங்களும் பிற்பகல் 2 மணி முதல் இரவு 7 30 மணிவரை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (ஐ-180)

## பாராட்டு வைபவம்

குருநகர், செப். 27

யாழ். கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயத்தில் அதிபராக சேவையாற்றி தீவக கல்வி வலயத்துக்கான உதவிக்கல்விப் பணிப்பாளராக (ஆங்கிலம்) பதவியுயர்வு பெற்றுச் சென்று சேவையாற்றும்பி.பெனடிக்ற்றின் சேவை நலன் பாராட்டு வைபவம் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயத்தில் அதிபர் ம. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும். (ஐ-51)

# விமான, கப்பல் பயணிகள் வசதி கருதி செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள்

## சிவில் நிர்வாக அலுவலகம் விடுக்கும் அறிவுறுத்தல்கள்

குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு விமானம் மற்றும் கப்பல் மூலம் செல்லும் பயணிகள் தமது பயண ஏற்பாடுகளைச் செய்வதில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்வகையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொர்டர்பாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் பொதுமக்களுக்கு விளக்கம் அளித்துள்ளது.

பயண ஏற்பாடுகளுக்காக யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு வரும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக கடந்த 21ஆம்திகதி உதயனில் 'வாசகர் திருமுகம்' பகுதியில் வாசகர் ஒருவர் சுட்டிக்காட்டியமை தொடர்பாகவே இந்த விளக்கம் அளிக்கப்பட்டுளளது,

அந்த விளக்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது;—

★ விமானம் மூலம் செல்லும் பயணிகள் தமது பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குகாலை 10 மணிக்குப் பின்னரே வரவேண்டும். வாடகைக்கார் பிடித்து அதிகாலையே இங்கு வர வேண்டிய தேவையில்லை. வட பிராந்திய பஸ்களில் காலை 10 மணிக்குப் பின்னர் வந்தால் போதுமானது.

★ பொதுமக்கள் தமது பாதுகாப்பு அனுமதியைப் பார்த்து, அன்றைய தினமே சிவில் அதிகாரியைச் சந்திக்க வசதி செய்யப்பட்டுள்ளது. தாம் பயணம் செய்யவிருக்கும் திகதியை அவரிடம் தெரிவித்ததும், டிக்கெட் பெற வேண்டிய தினம், நேரம் ஆகிய விவரங்கள் அவருக்கு வழங்கப்படும்— அன்றைய தினம் குறிப்பிடப்பட்ட நேரத்தில் வந்து அவர் தமது டிக்கெட்டைக் கொள்வனவு செய்ய முடியும்.

★ பயணி ஒருவர் இன்று அலுவலகத்தில் சமுகமளித்து நாளை பயணம் செய்ய வசதி செய்யுமாறு கோரினால் அது சாத்தியமற்றது. ஒவ்வொரு பயணியின் விவரமும் பலாலி தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து அனுமதியைப் பெறவேண்டியுள்ளது. அதற்கு 24 மணி நேர அவகாசம் தேவையாகவுள்ளது. இதைக் கருத்திற் கொண்டே ஒரு பயணிக்கு டிக்கெட் கொள்வனவு செய்யும் திகதி வழங்கப்படுகின்றது.

★ தற்சமயம் தினமும் 150 பயணிகளே விமானத்தில் செல்லவசதி உள்ளது அதற்கு ஏற்பவே பயணிகளுக்கு பயண வசதி வழங்க வேண்டியுள்ளது. கூடுதல் விமான சேவை ஆரம்பித்தால் மட்டுமே கூடுதலானவர்களுக்கு பயண வசதி அளிக்கமுடியும். தினமும் 150 பயணிகள் மட்டும் செல்ல வசதி இருக்கும் போது எவ்வாறு 300 பேரை அனுப்பமுடியும், இதன் காரணமாகவே பயணிகள் தமது பயணத்தை உடன் மேற்கொள்ள முடியாதுள்ளது

★ அவசர நோயாளர்களை அவர்களின் அவசர தேவையைப் பொறுத்து உடன் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுகின்றது. மரண வீட்டுக்குச் செல்வோர், அவசர சிகிச்சை பெறவேண்டிய நோயாளர்கள், குறுகிய கால அழைப்பில் நேர்முகப்பரீட்சைக்குச் செல்லவேண்டியவர்கள் ஆகியோர் தமது ஆவணங்களுடன் சமுகம் தரும் பட்சத்தில் உடன் பயண ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்:

★ பயண ஏற்பாடுகளுக்கு வரும் பொதுமக்களுக்கு போதிய வசதி செய்து கொடுக்கப்படுவதில்லை என்று கூறப்படும் முறைப்பாடுகளில் எந்தவித உண்மையும் இல்லை. பயண ஏற்பாடுகளுக்காக எமது அலுவலகத்தின் பாதுகாப்பு எல்லைக்குள் அனுமதிக்கப்படும் பயணிகளுக்கு குடிதண்ணீர் மற்றும் மலசல கூட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. கன்ரீன் வசதி மட்டும் செய்து கொடுக்கப்படவில்லை. கன்ரீன் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ எமது அலுவலகத்துக்கு வெளியில் காத்திருப்பவர்களுக்கு குடிதண்ணீர் வசதி வழங்க முடியாதுள்ளது.பாதுகாப்புக் காரணங்களுக்காகக் குடிதண்ணீர்த் தாங்கியை அங்கு அமைக்க முடியாதுள்ளது. பொதுமக்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீரை வரும்போதே கொண்டுவருவது நல்லது.

★ அலுவலகத்துக்கு வெளியே அரச மரத்தடியில் அமைக்கப்பட்டுள்ள சிறு கடைகளில் உணவுப்பொருள்கள் சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படும் வகையில் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக மாநகரசபையே நடவடிக்கை எடுக்கவேண்டும். அது விடயத்தில் நாம் எதுவும் செய்ய முடியாது.

★ பொதுமக்கள் தமது பயண ஏற்பாடுகளை இரண்டு அல்லது மூன்று மணி நேரத்துக்குள் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே பொதுமக்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீரையோ, உணவையோ தாமே எடுத்து வர வேண்டும் என்று அறிவுறுத்துகின்றோம்.

★ அரசமரத்தடியில் உள்ள சிறு கடைகளில் உள்ள உணவுப் பொருள்கள் விலை கூடியதாக உள்ளது என்று தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக மாநகரசபைக்கு அறிவிக்க வேண்டும். அந்தப் பகுதியில் காத்திருப்போருக்கான குடிதண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகளை மாநகர சபையே மேற்கொள்ள வேண்டும்.

★ கப்பல் மூலம் செல்லும் பயணிகள் விமானம் மூலம் திரும்புவதற்கு கொழும்பில் பல நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதைத் தொடர்ந்து கப்பல் மூலம் செல்லும் பயணிகள் பயணத்திகதியில் இருந்து 45 நாள்களுக்குள் மீண்டும் திரும்புவதாயின் விசேட ஏற்பாடு கொழும்பில் செய்யப்பட்டுள்ளது.

★ பயணத்தின் போது வழங்கப்படும் பயண அனுமதிப் பெர்மிட்டைச் சமர்ப்பித்து டிக்கெட்டை இரத்மலானையில் கொள்வனவு செய்ய முடியும். இதற்கான அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. (ஐ-3)

## நாளை

புரட்டாதி 11

செவ்வாய்க்கிழமை

திதி: திருதியை

முற்பகல் 11.43 வரை

நட்சத்திரம்: அச்சுவினி

காலை 6.28 வரை

பரணி

பின் இரவு 5.03 வரை

சங்கடஹரசதுர்த்திவிரதம்

மகாபரணி

சுபநேரம்: 10.32—12.02

ராகுகாலம்: 3.02—4.32

(பகலுக்கும் இரவுக்கும் பழையபடி...)

## உதயவாக்கு

நியாயம் இன்னதென்று தெரிந்து நீ அதனைச் செய்யாது இருப்பது கோழைத்தனம்.

— கன்பூசியஸ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மேலும் 18 நுண் கருத்திட்டங்களுக்கு

## ஐ. நா. தூதரகம் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், செப். 27

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் யாழ். மாவட்டத்தில் மேலும் 18 நுண்கருத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நுண் கருத்திட்டங்கள் தொடர்பான கூட்டம் ஒன்று யாழ். செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிதி ஒதுக்கப்பட்ட நுண் கருத்திட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

மீனவர் தங்கும் விடுதி — பருத்தித்துறை சுப்பர் மடம்.

வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரி திருத்தம்.

நெல்லியடி எம்.எம்.ரி.எஸ். பாடசாலை திருத்தம்.

ஊர்காவற்றுறை ஊரி நீர் விநியோகத்திட்ட புனரமைப்பு.

ஊர்காவற்றுறை வியாவில் ஜீ. ரி. எம். எஸ். பாடசாலை புனரமைப்பு.

அராலி மீன் சந்தை புனரமைப்பு.

பண்ணாகம் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் அமைப்பு.

துணைவி ஏ. எம். ரி. எம். எஸ். பாடசாலை திருத்தம்.

சாவற்காடு மீனவர் உதவித் திட்டம்.

மகாஜன ஆரம்ப பாடசாலை திருத்தம்.

தெல்லிப்பழை முறைசாராக் கல்லூரி மண்டபம்.

வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம் திருத்தம்.

ஊரெழு கிராமிய சுகாதார நிலையக்கட்டட திருத்தம்.

சாவகச்சேரி பொதுக் கிணறு திருத்தம்.

யாழ். போதனா வைத்திய சாலை சத்திர சிகிச்சைக் கூடம் திருத்தம்.

அவசர சிகிச்சைப் பிரிவு வார்ட் திருத்தம்.

நாகர்கோயில் — எழுதுமட்டுவாள் வீதி திருத்தம்.

நாகர்கோயில் சுகாதார சிகிச்சை நிலையக் கட்டடம் அமைப்பு. [ஐ-5]

## புதுக்குடியிருப்பு அனர்த்தம்

## அரசு பாரபட்சம் காட்டியதை அஷ்ரப் ஏற்றுக் கொண்டார்

கொழும்பு, செப். 27

புதுக்குடியிருப்பில் கடந்த சில வாரங்களுக்கு முன் இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலின் போது தமிழ் மக்கள் பலியான சம்பவம் தொடர்பாக அரசு பாரபட்சமாக நடந்து கொண்டதை ஏற்றுக் கொள்வதாக துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்ற தமது அமைச்சிற்கான குறை நிரப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்புச் சம்பவம் தொடர்பாக அரசு பாரபட்சமாக நடந்து கொள்வதாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் சுட்டிக் காட்டியதை நாமும் ஏற்றுக் கொள்கிறோம் — என்று அஷ்ரப் அங்கு தெரிவித்தார்.

அம்பாறைச் சம்பவத்திற்கு அனுதாபம் தெரிவித்ததுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா புதுக்குடியிருப்பு சம்பவத்தின் போது நடந்து கொண்ட விதம் மற்றாந்தாய் மனப்பான்மையையே காட்டுவதாக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தது தெரிந்ததே. (ஐ-ரி)

## ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், செப். 27

ஆலயத்தின் கதவுகளை உடைத்து உட்சென்றதிருடர், ஆலயத்தின் மூலஸ்தானத்தில் இருந்த விக்கிரகத்தில் அணியப்பட்டிருந்த தங்கச் சங்கிலியைத் திருடிச் சென்றுள்ளனர்.

கச்சேரி நல்லூர் வீதியில் இருக்கும் நாச்சி அம்மன் (புவனேஸ்வரிஅம்மன்) ஆலயத்தில் அண்மையில் இத்திருட்டுச் சம்பவம் நடைபெற்றது

மறுநாள் காலை சனி பிரதோஷ பூசைகளை நடத்த ஆயத்தம் செய்யச் சென்றபோதே சங்கிலி திருட்டுப் போன விவரம் தெரியவந்ததாக பூசகர் தெரிவித்தார். (ஐ-15)

## கணனிப் பயிற்சி ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 27

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவின் மகேஸ்வரி கணனிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் புதிய பயிற்சிநெறி ஆரம்பித்து வைக்கும் நிகழ்வும் எதிர்வரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு அதிபர் க. இராசதுரை தலைமையில் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் ஐ. ஐ, எஸ் கணனி நிலைய இயக்குநர் கு.விக்னேஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-க)

## பாம்பு தீண்டியது

யாழ்ப்பாணம், செப். 27

கிணற்றடிக்கு தண்ணீர் எடுக்கச் சென்றவேளை பெண் ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்காகினார்.

கரணவாய் தெற்கில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னத்தம்பி இராசம்மா (வயது 60) என்ற பெண்ணே பாம்புக்கடிக்கு இலக்காகி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## ஏற்பு வலியினால் மரணம்

யாழ்ப்பாணம், செப். 27

இருமாதங்களுக்கு முன் சிறுதடி குத்திக்காயமடைந்த ஒருவர் ஏற்புத்தடை ஊசி மருந்தினைப் போடாது கவனயீனமாக இருந்ததனால் ஏற்புவலி நோய் ஏற்பட்டு மரணமானார்.

காரைநகர், மல்லிகைப் பகுதியைச் சேர்ந்த ஆண்டி சண்முகநாதன் (வயது 40) என்பவரே உயிரிழந்தவராவார்.

தொண்டைநோவு, காய்ச்சலுடன் கடந்த மாதம் 25 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் 20 நாள்களின் பின் சிகிச்சை பலனளிக்காது அங்கு மரணமானார்.

ஏற்புவலியினால் ஏற்பட்ட மரணம் என தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

## கையெழுத்துச் சஞ்சிகை போட்டி

வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையே கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி நடத்தப்பட உள்ளது.

பாடசாலை மாணவர்களின் கலை இலக்கிய ஆர்வம், ஆக்கத் திறன், ஆற்றல், கூட்டுமுயற்சி, குழுமுறைக் கற்றல், தொடர் பாடல் என்பவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இப்போட்டி நடத்தப்படுகின்றது.

பாலர் பிரிவு, இடைநிலைப் பிரிவு, கல்லூரி நிலைப் பிரிவு என்ற நிலைகளில் போட்டிகள் ஆறு பிரிவுகளாக நடைபெறும்.

ஒவ்வொரு பிரிவு மாணவர்களும் தயாரிக்கும் மூன்று சஞ்சிகைகள் வலய, மாகாண மட்டங்களில் மதிப்பீடு செய்து பரிசுகள் வழங்கப்பட உள்ளன. [ஐ-152]


**இந்திரன்**

**சித்த ஆயுள் வேத மூலிகை வியாபார நிலையம்**

சுந்தரம் பிறதேஸ் – யாழ்ப்பாணம்

உற்பத்தி செய்து தயாரித்து வழங்கும்
கோயில் அபிஷேகச் சாமான்கள், கோயில் பொருள்கள்
மருந்துச்சரக்கு வகைகள், கிரியைச் சாமான்கள்
அனைத்தும்.

சில்லறையாகவும்–மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

கச்சாய் வீதி – சாவகச்சேரி. (69336)



**யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ–து)**

**பதவி வெற்றிடம்**

லொறிச்சாரதி

சம்பளத்திட்ட இல. 9

ரூபா 3200 90 x 10 110 x 10 ரூபா 5200

மேற்படி பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவை தொடர்பான தகைமைகள், நிபந்தனைகள் பற்றிய விவரங்களையும், ரூபா 10.00 செலுத்தி விண்ணப்பப்படிவங்களையும் சமாசப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 09 – 10 – 1999 ஆகும்.

பொது முகாமையாளர்
யாழ். மா. வி. நு. கூ, ச. சமாசம்.

111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
27-9-99. (சி/9074)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கிட்டினர் சிதம்பரப்பிள்ளை**

(ஓய்வுபெற்ற தலைமையாசிரியரும் வைத்தியரும் சோதிடரும்)

மலர்வு 15-07-1915 உதிர்வு 08-10 1998

திதி: 27 – 09 – 1999

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் சிறந்த வைத்தியராய் சோதிடருமாய் மாண்புறு நல் ஆசானுமாய் குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்பெனும் தீபத்தில் அணையாத ஒளியாயிருந்த ஆருயிரே! சிறந்த வழிகாட்டியாய் இருந்து எம்மை விட்டுப் பிரிந்த அன்புத்தெய்வமே! ஓராண்டு சென்றாலும் நீங்கள் காட்டிய அன்பு வழியில் நீங்காதிருக்கும் ...

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

குரும்பைகட்டி,
புலோலி. (69392)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**சிவகுரு விஸ்வநாதன்**

மலர்வு 31 – 07 – 1943 உதிர்வு 07 – 10 – 1998

ஆண்டொன்று ஆனதையா
ஆறவில்லை எம் துயரம்
ஒரு நொடியில் போனதையா உமது உயிர்
மீண்டும் இங்கு வாருமையா
விழி நீர் சொரியக் காத்திருப்போம்.

துயரால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள,
பேரப்பிள்ளைகள்.

வி. ரவிக்குமார் (மகன்),
''நாகபவனம்'',
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (69374)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காட்மண்டு போட்டிகளில் நேற்று
# இலங்கைக்கு 2 தங்கப் பதக்கங்கள்

காட்மண்டு, செப். 27

காட்மண்டுவில் நடைபெறும் எட்டாவது தெற்காசிய விளையாட்டு போட்டிகளில் (சாவ்) நேற்றுஇலங்கை இரு தங்கப் பதக்கங்களைப் பெற்றது.

பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில், இலங்கை வீராங்கனை தமயந்தி தர்ஷா 11.17 விநாடிகளில் ஓடி புதிய சாதனை படைத்து தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

ஆண்கள் பிரிவில் இடம் பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் இலங்கை வீரர் சரத் பிரசன்ன கமகே தங்கப் பதக்கத்தையும் மெய்யப்பன் மனோகரன் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான மரதன் ஓட்டப்பந்தயத்தில் இலங்கை வீராங்கனைபி.ஏ. வினோதா வெள்ளிப் பதக்கத்தையும் மல்லிகா சந்திரகாந்தி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

ஆண்கள் பிரிவிலான உயரம் பாய்தல்போட்டியில்இலங்கை வீரர் ரங்கன பெரேரா வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

நடந்து முடிந்த நேற்றைய போட்டிகளில் பங்குபற்றிய இன்னொரு நாடான இந்தியா 9 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-ரி)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக், பதிவு செய்த கழகங்களுக்கு இடையே லீக் முறையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு;-

★ மாலை 4 மணிக்கு அரியாலை ஐக்கிய வி. க. எதிர் சென். அன்ரனீஸ் வி. க.

★ மாலை 5 மணிக்கு சென். அன்ரனீஸ் வி. க. எதிர் சென். மைக்கல் வி. க. (உ-ரி)

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஈ. ஆர். போக்குவரத்துச்சேவை ஆதரவுடனும் பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடனும், வடமராட்சி ரீதியில் திக்கமுனை மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ சிவானந்தா வி.க. எதிர் திக்கம் இளைஞர் வி.க.

★ தொண்டமனாறு ஒற்றுமை வி.க.எதிர் நியூட்டன் வி. க. (இ-ரி)

★ ★ ★

வடமராட்சிக்கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்று வரும் லீக்முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெற உள்ள ஆட்டங்களில் விளையாட விருக்கும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு;-

16 வயதுப் பிரிவு

★ கலட்டி ஆர். சி எதிர் விக்னேஸ்வராக் கல்லூரி (திக்கம் மைதானம்)

★ சிதம்பரக் கல்லூரி எதிர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் (நெல்லியடி ம. ம. வி மைதானம்)

18 வயதுப் பிரிவு

★ வல்வை சிவகுரு வித்தியாலயம் எதிர் விக்னேஸ்வராக்கல்லூரி (திக்கம் மைதானம்)

★ கொற்றாவத்தை எதிர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (நெல்லியடி ம. ம. வித்தியாலய மைதானம்)

★ ★ ★

வலிகாமம் கல்வி வலயத்தில் சண்டிலிப்பாய்ப் பிரிவு பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற உள்ள 14 வயதுப் பிரிவிலான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் புனித ஹென்றியரசர் கல்லூரி

★ மாதகல் சென்ஜேம்ஸ் கல்லூரி எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை. (ரி-90

## வெற்றி தோல்வி இன்றி முடிந்த ஆஸி - இலங்கை ஆட்டம்

யாழ்ப்பாணம், செப். 27

இலங்கை — ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையே காலியில் நடைபெற்ற இரண்டாவது ரெஸ்ட் போட்டி நேற்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமான இந்த ரெஸ்ட் போட்டி மழை காரணமாக இறுதி நாளான நேற்றும் 10 நிமிடங்கள் மட்டுமே நடைபெற்றது இரண்டாவது இனிங்ஸில் விக்கெட்டுக்கள் எதையும் இழக்காமல் 55 ஓட்டங்களுடன் இலங்கை அணியும், துடுப்பெடுத்து ஆடாத நிலையில் ஆஸ்திரேலிய அணியும் இருந்தமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததாக ஆட்ட மத்தியஸ்தர் அறிவித்தார்.

இந்தத் தொடரின் 3 ஆவதும் இறுதியுமான ரெஸ்ட் ஆட்டம் நாளை மறுதினம் ஆரம்பம் ஆகும். (இ-ரி)

## நைரோபிப் போட்டிகளில் இந்தியா, சிம்பாப்வே வெற்றி

நைரோபி, செப். 27

நைரோபியில் நடைபெறும் நான்கு நாடுகளுக்கு இடையிலான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணி தென் ஆபிரிக்க அணியை எட்டு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்க அணி 48 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 117 ஓட்டங்களைப்பெற்றது. இந்திய அணி சார்பில் சுனில் ஜோஷி 5 விக்கெட்டுக்களையும் நிக்கில் ஷோப்றா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 22.4 ஓவர்களில் வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இந்திய அணி சார்பில் சடகோபன் ரமேஷ் 36 ஓட்டங்களையும், சௌரவ் கங்குலி 38 ஓட்டங்களையும் பெற்று வெற்றிக்கு வழிவகுத்தனர்.

### சிம்பாப்வே வெற்றி

நைரோபியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் சிம்பாப்வே அணி கென்யா அணியை ஏழு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்றது.

முதலில் துடுப்பெடுத்து ஆடிய கென்யா அணி மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்து ஆடிய சிம்பாப்வே அணி 49.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றிக்குத் தேவையான 199 ஓட்டங்களைப் பெற்றது சிம்பாப்வே அணி சார்பில் முறே குட்வின் சிறப்பாகத் துடுப்பெடுத்து ஆடி ஆட்டமிழக்காது 76 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வழிவகுத்தார்.

நடைபெற்று முடிந்த இரு ஆட்டங்களிலும் தலா ஒவ்வொரு போட்டிகளை வென்று இந்திய அணியும் சிம்பாப்வே அணியும் முன்னணியில் உள்ளன. (இ-ரி)

## முதலிடத்தில் ட்ராவிட்

இந்திய கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டக்காரரான ராகுல் ட்ராவிட் இவ்வருடத்துக்கான ''சியாட்'' தரப்படுத்தல் வரிசையில் 36 புள்ளிகளைப் பெற்று முன்னணி வகிக்கிறார்.

இவர் நடந்து முடிந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிகபட்ச ஓட்டங்களைக் குவித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)


## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

3 ஆம் வருட B பிரிவு

இந்து நாகரிகத்துறை சிறப்புக்கலை மாணவியாகிய

**செல்வி சுறாஜினி**

அவர்களின் அன்புத் தந்தையாகிய

**கணபதி மார்க்கண்டு**

அவர்களின் நினைவு நாளில் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

3 ஆம் வருட B பிரிவு

இந்து நாகரிக சிறப்புக்கலை மாண…

(69400)


பட்டினிக்கெதிரான நிறுவனத்தின்

## குளம் புனரமைப்புப் பணியை அதிகாரிகள் குழு மேற்பார்வை

வலிகாமம்தெற்கு செப். 27

யாழ். மாவட்டத்தில் பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் சிறு குளங்கள் புனரமைப்புத் திட்டத்தினை அந் நிறுவனத்தின் கொழும்புப் பிரதிநிதிகள் பார்வையிட்டு எதிர்பார்த்ததை விட கூடுதலான வேலை நடைபெற்றிருப்பதாக திருப்தி தெரிவித்துள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி செல்வி பிரான்சிஸ் ஜேக்கப் உணவு பதனிடல் பாதுகாப்பு பொறுப்பதிகாரி நிக்கலஸ் றோவோல்ஸ் ஆகியோர் பட்டினிக்கெதிரான நிறுவன யாழ்ப்பாணப் பிரதிநிதி ஷெல்டன், உதவி முகாமையாளர் கே. சர்வானந்தா, வெளிக்கள உத்தியோகத்தர் க. இராஜேந்திரம் ஆகியோருடன் மல்லாகம் நீலியம் பனைக்குளம், கந்தரோடை துரும்பகுளம் ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகளைச் சென்று பார்வையிட்டனர்,

இவ்விருகுளங்களும் அவ்வப்பகுதி விவசாய சம்மேளனங்களின் ஒத்துழைப்புடன் புனரமைக்கப் பட்டுள்ளன.

## 2 நிறைமாத கர்ப்பிணிகள் ஆஸ்பத்திரியில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 27

யாழ் ஆஸ்பத்திரியில் பதினைந்து நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து இரண்டு நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்கள் உயிரிழந்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் கடந்த வெள்ளியன்று இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் ஒருவர் 10 மாதங்களைக் கடந்தும், பிரசவிக்காதநிலையில்இருந்ததாகவும். மற்றவர் நிமோனியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தார் எனவும் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

10 மாதங்கள் கடந்த நிலையில், பண்டத்தரிப்பு செட்டி குறிச்சியைச் சேர்ந்த மணிவண்ணன் இந்திரகுமாரி (வயது34) என்பவரும்,

நிமோனியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த எழினர் கிருபாமலர் (வயது37) என்பவருமே உயிரிழந்தனர்.

இறந்த இருவரினதும் சடலங்களையும் பிரேத பரிசோதனை செய்யுமாறு, மரண விசாரணையின் போது உத்தரவிடப்பட்டுள்ளது.

## தேவாலய மண்டபம் திறப்புவிழா

வண்ணார்பண்ணை மெதடிஸ்த தேவாலய மண்டபத் திறப்புவிழா நேற்றுக் காலை இடம்பெற்றது.

பிரஸ்தாப தேவாலயத்தின் மதகுருவும் மெதடிஸ்த திருச்சபை யாழ். சேகரத்தின் முகாமைக்குருவுமான அருட்திரு எஸ். எஸ். ரெரன்ஸ் நாடாவை வெட்டி மண்டபத்தைத் திறந்துவைத்தார்.

சுமார் ஐந்தரை இலட்சம் ரூபா செலவில் இந்த மண்டபம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் மெதடிஸ்த திருச்சபை யாழ் சேகரத்தின் புதிய முகாமைக்குரு அருட்திரு கருணசேகரா நாளை யாழ்ப்பாணம் வருகிறார். அருட்திரு எஸ் எஸ். ரெரன்ஸ் இடம்மாற்றலாகி இவ்வாரம் திருகோணமலைக்குச் செல்கிறார். (இ)

## சமய அறிவுப் போட்டி

யாழ். கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு வழமை போல் இவ்வருடமும் யாழ் மாவட்டப்பாடசாலைகளுக்கிடையேயான நான்கு பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டியை நடத்த உள்ளது.

வடமராட்சி வலிகாமம், தென்மராட்சி, மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நான்கு நிலையங்களிலும் நவராத்திரி ஆரம்பதினமான எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை போட்டி நடத்தப்படும்,

விஜயதசமித்தினமான அடுத்த மாதம் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் தங்கள் பாடசாலை அதிபரிடம் இருந்தோ அன்றேல் கண்டி வீதி, சுண்டுக்குளியிலுள்ள யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலிருந்தோ அடுத்தமாதம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தேவையான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-30)

## தடுப்பு முகாமுக்கு அதிகாரி விஜயம்

யாழ்ப்பாணம், செப். 27

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் யாழ். மாவட்ட அதிகாரி சட்டத்தரணி என். ஜீவேஸ்வரா எதிர்வரும் 29 ஆம் திகதி காங்கேசன்துறை தடுப்புமுகாமிற்கு விஜயம் செய்யவுள்ளார். (ஐ-5)

## சமய சந்நிதிகளில்

குருநகர், செப் 27

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயப் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நவ நாள் ஆராதனையைத் தொடர்ந்து அடுத்த மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச் சொரூப தேர்ப் பவனியும் திருச் சொரூப ஆசிரும் இடம்பெறும். (ஐ-51)

★ ★ ★

யாழ். போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள அன்னை வேளாங்கண்ணி மாதாஆலய திருநாள் கொண்டாட்டம எதிர்வரும் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து எதிர்வரும் ஒக்டோபர் 2 ஆம் திகதி வரை ஆராதனைகள் இடம்பெறும். ஒக்டோபர் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 15 மணிக்கு யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படும். (ஐ-15-51)

★ ★ ★

குருநகர் மத்தியகிழக்கு வீதியில் அமைந்துள்ள அருள் மாதா சிற்றாலயத்தின் 11 ஆவது ஆண்டுவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இன்றும் நாளையும் மாலை வேளைகளில் செபமாலை வழிபாடு நடைபெறும்.

நாளை மறுதினம் புதன் கிழமை பி.ப. 5 மணிக்கு செபமாலை வழிபாடு இடம் பெறும். அதனை தொடர்ந்து திருச் சொரூப ஆசீர்வாதத்துடன் திருவிழா நிறைவு பெறும். (ஐ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீர் வரி அறவிடுவதற்கு பாவனையாளர்கள் ஆட்சேபம்

வலிகாமம் தெற்கு, செப். 27

கந்தரோடைக் கிராமத்தில் குடி தண்ணீர்பாவனையாளர்களிடமிருந்து வரி அறவிடுவது சம்பந்தமாக யாழ்ப்பாணம் நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை எடுத்துள்ள முடிவினை எதிர்த்து கந்தரோடை கிராம மக்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி. மா. செல்வராசாவிடம் மகஜர் சமர்ப்பித்துள்ளனர்.

கந்தரோடை கிராம குடி தண்ணீர் விநியோகத் திட்டம் முன்னாள் சுன்னாகம் பட்டின சபை உப தலைவர் காலஞ்சென்ற மா. ந. நடராசாவினால் ஆரம்பிக்கப்பட்டு நீர் வழங்கு வடிகாலமைப்பு சபையினால் இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

மக்கள் இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்த பின்னர், கடந்த காலஅனர்த்தங்களால் இத் திட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

புனரமைப்பு செய்யப்பட்ட இக் குழாய்களில் இருந்து குடி தண்ணீர் பெறும் பாவனையாளர்களிடம் ஒரு குழாயில் நீர்பெறுவோரிடமிருந்து மாதம் 450 ரூபாவினை வரியாக அறவிடுவது என நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

வரிஅறவிடுவதுசம்பந்தமான மக்களின் முறைப்பாட்டை தொடர்ந்து பிரதேச சபைத் தலைவர் தி. மா. செல்வராசா யாழ். நீர்வழங்கு சபை பொது முகாமையாளர் யேசுதாசனுடன் கலந்துரையாடியுள்ளார்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை இத் திட்டத்தை தமது பொறுப்பில்எடுத்துமக்களுக்கு இலவசமாக நீர்விநியோகிக்க இருப்பதாகவும், வரிவசூலிக்க எடுக்கும் முயற்சிகளை உடன் நிறுத்துமாறும் பொது முகாமையாளருக்கு அவர் அறிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் க்ளஸ்ட [தேவானந்தாவுடன் இவ் விடயம் பற்றி கலந்துரையாடி குடி நீர்த் திட்டத்தை பிரதேச சபை கையேற்பதற்கான நடவடிக்கைகளை தலைவர் தி.மா. செல்வராசா மேற்கொண்டுள்ளார். (ஐ-152)

## அனலைதீவு துறைமுகப்பாலம் புனரமைப்பு

நெடுந்தீவு, செப். 27

அனலைதீவு துறைமுகப் பாலம் விரைவில் திருத்தியமைக்கப்படவுள்ளது.

பாலத்தின் பழுதடைந்த பகுதியைப் பார்வையிடும் பொருட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இன்று திங்கட்கிழமை அனலைதீவுக்குச் செல்லவுள்ளதாகத் தெரிகிறது. (ஐ-111)

### எல்லைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

இவர்கள் தத்தமது பிரதேசங்களில் 24 மணி நேர பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவர். இந்த ஊர் காவலர் அனைவருக்கும் இரண்டு மாத இராணுவப் பயிற்சி வழங்கப்படும். தானியங்கித் துப்பாக்கிகளைக் கையாளும் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கப்படும்.

எல்லைப்புற கிராமங்களின் பாதுகாப்புக்குஎன நியமிக்கப்படும் ஊர்காவலர்கள் எக்காரணம்ககொண்டும் பொலீஸ் மற்றும் இராணுவ தொடர்புடைய வேலைகளில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள்.

விரைவில் பெண்களும் ஊர் காவல்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

2ஆயிரம் பேரைக்கொண்ட சிவில் பாதுகாப்புத் தொண்டர் படை ஒன்றும் எல்லைக் கிராமங்களில் உருவாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மூன்று நாள் இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன் ''ஷொட்கண்''களும் வழங்கப்பட்டுள்ளன.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-6-21)


A/L எடுத்தவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்
மேலும் ஒரு புதிய பிரிவு
ஆரம்பம்: 30-09-99

OXFORD ENGLISH ACADEMY

நெல்லியடியில்
பிற்பகல் 5.00 மணி
அனுமதியை Maths Centre இல் பெறவும்.

பருத்தித்துறையில்
ஆலடிப்பிள்ளையார் வீதி, சுப்பர்மடம்.
பிற்பகல் 4.00 மணி

by Mr. B. Jothy

அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.
(69344)


### இரு அமைச்...

(முதலாம் பக்கத் தொடர்)

னணி அரசாங்கத்துக்கும், முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை நீக்க இந்த சந்திப்பின் போது முயற்சி மேற்கொள்ளப்படும். (இ-7

### பரந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்)

உடனடியாக அங்கு தரித்து நின்ற இரண்டாவது டாங்கியை அவசரம் அவசரமாக இயக்கிக் கொண்டு சென்றதாகவும்—

சேதமடைந்த டாங்கியை பிரதான வீதியோரமாக இழுத்துச்செல்ல முயன்ற போது தீப்பிளம்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து அந்த டாங்கி வெடித்து முற்றாகச் சிதறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து செப்புத் தகட்டில் பொருத்தப்பட்ட செப்புக்கம்பித் துண்டங்களைப் படையினர் மீட்டுள்ளனர். அவை டாங்கியைச்சேதப்படுத்திய குண்டின்பாகங்களாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

மேலதிக பரிசோதனைகளுக்காக அவை கொழும்புக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் படை வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அப்பகுதிக் ஊடுருவிய புலிகள் டாங்கியில் அதிசக்தி வாய்ந்த வெடிகுண்டைப் பொருத்திவெடிக்க வைத்துள்ளனரா அல்லது வழிநடத்தும் கருவிகளுடன் கூடிய டாங்கி எதிர்ப்பு ஏவுகணை Anti tank missile with a guidance System) மூலம் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறதா என்ற சந்தேகங்கள் படைவட்டாரங்களில் எழுந்துள்ளதாக கொழும்பு பாதுகாப்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

### மேலும்...

[முதலாம்பக்கத் தொடர்]

டுள்ள ராணுவ அதிகாரிகளை விசாரித்து அவர்களிடம் இருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டால் செம்மணிப் பகுதியில் மேலும் பல புதைகுழிகளை அடையாளம் காணும் வாய்ப்புக்கள் உள்ளன.

ராஜபக்ஷவை மீண்டும் அழைத்து வந்து காட்டிய போது தோண்டப்பட்ட இடங்கள் சரியானவையே எனத் தெரிவித்தார். எனினும் அவரது கூற்றை முழுமையாக நம்பமுடியாது.

யாழ். குடாநாட்டில் உள்ள வேறு புதைகுழிகள் தொடர்பான மேலதிக விவரங்கள் யாழ். மக்களுக்கு தெரிந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அதனைத் தெரிவிக்கத் தயங்குகின்றனர். அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டால் தாமாகவே புதைகுழிகளை அடையாளம் காட்டுவதற்கு அவர்கள் முன்வருவார்கள்.

சர்வதேசரீதியில் புதைகுழிகளிலிருந்து உடல்கள் அப்புறப்படுத்தப்பட்ட சம்பவங்களைப் பார்க்கும் போது, செம்மணியில் எலும்புக் கூடுகள் எதுவும் காணப்படாத புதைகுழிகளில் இருந்துஅவை அகற்றப்பட்டதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை.

இப்படி அவர் கூறினார். (இ-6-21)


''MARBLES''
Terrazzo Flooring and Maintenance
சேவைகள்
நிலங்களுக்கு வேண்டிய வர்ணங்களில் ரெறாசோ மாபிள் பதித்தல்.
பழைய ரெறாசோ மாபிள் பதித்த இடங்களைப் பராமரித்தல் (Polishing)
''மாபிள்ஸ்''
(அரசாங்கத்தாலும் கூட்டுத்தாபனங்களாலும் பதியப்பட்ட ஒப்பந்தகாரர்)
தொல்புரம், சுழிபுரம்.
42, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2328
குறிப்பு: மின் இணைப்பற்ற இடங்களுக்கும் ரெறாசோ மாபிள் பதித்துக் கொடுக்கப்படும்.
எமது உப தயாரிப்புகள்:
ஞாபகார்த்த எழுத்துத் தட்டுக்கள்,
பூச்சாடிகள், குளியலறைக் கற்கள், முகட்டோடுகள்.
(69266)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-09-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கனடா நாட்டுத் தூதர் இன்று அரச அதிபருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், செப், 27

யாழ்ப்பாணத்தில் ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள கனடா நாட்டுத் தூதர் இன்றும், நாளையும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றுகின்றார்.

இன்று காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் தூதுவர் பின்னர் சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான குழுவின் பிரதிநிதிகளையும், யாழ். அரச அதிபரையும் சந்திக்க இருக்கின்றார்.

நாளை ஐ. நா. அபிவிருத்தித்திட்ட ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு நிதிய அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடுவார்.

சென். ஜோன்ஸ் கல்லூரி, சர்வோதய அமைப்பு அலுவலகம் ஆகியவற்றுக்கும் அவர் செல்வார். இங்கிருந்து அவர் நாளை மறுதினம் கொழும்பு திரும்புவார்.

# நீலன்கொலையைதிட்டமிட்டவர் சென்னை சென்று விட்டாராம்

## விசாரணைக் குழு தகவல்

கொழும்பு, செப். 27

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வத்தின் படுகொலையைத் திட்டமிட்டவர் எனக் கூறப்படும் எரிக் சவுந்தரநாயகம் என்பவர் தற்சமயம் சென்னையில் தங்கி உள்ளதாக இக்கொலை தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்டு வரும் விசேட பொலீஸ் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பம்பலப்பிட்டியில் உள்ள ஹொங்கொங் வங்கிக் கிளையில் அவரது பெயரில் இருந்த வங்கிக் கணக்கை தாங்கள் கண்டு பிடித்திருப்பதாகவும் பொலீஸ் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஜூலை 19ஆம் திகதி றோஸ்மீட் பிளேஸ் கின்சி வீதிச்சந்தியில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் நீலன் திருச்செல்வம் பலியாகியது தெரிந்ததே.

இந்தத் தாக்குதல் திட்டத்தைத் தயாரித்த எரிக் சவுந்தரநாயகம் தாக்குதல் நடப்பதற்கு ஒரு வாரம் முன்னதாக விமானம் மூலம் சென்னை சென்றிருப்பது தெரியவந்துள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன, [ஐ]

# உடுவில், தெல்லிப்பழை கோட்ட அலுவலகங்கள் திறப்பு

வலிகாமம் தெற்கு,செப். 27

உடுவில், தெல்லிப்பழை ஆகிய கல்விக் கோட்டங்களுக்கான அலுவலகங்களை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அண்மையில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

உடுவில் கல்விக்கோட்ட அலுவலகம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்திலும் —

தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட அலுவலகம் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்திலும் — திறக்கப்பட்டுள்ளன.

உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெற்ற உடுவில் கோட்ட திறப்புவிழாவில், பிரதிக் கல்விப் பணிப்பாளர் [சங்கீதம்] சங்கீத பூஷணம் எஸ். கணபதிப்பிள்ளை, வலிகாமம் வலய நிர்வாகத் துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம், சங்கானை, சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் சி. செல்லையா, க. தனபாலசிங்கம் உட்பட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற தெல்லிப்பழைக் கோட்ட திறப்பு விழாவிலும் இவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் போலும் கலந்து கொண்டார். [ஐ-152]

### 1,250 பயணிகள்...

[முதலாம் பக்கத் தொடர்]

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் என்றும்—

707 பேர் சொந்த அலுவல்கள் காரணமாக கொழும்பு மற்றம் பிற பகுதிகளுக்குச் சென்று திரும்பியவர்கள் என்றும் — அவர் மேலும் கூறினார்.

கப்பல்சேவை ஆரம்பமாகையில் இவர்கள் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார். (இ-ரி)

### தனியார்...

[முதலாம் பக்கத் தொடர்]

மலையகப் பகுதியில் இடம் பெற்றுள்ள இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் படை வட்டாரங்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

கடந்த ஒரு வாரகாலத்தில் இடம்பெற்ற மூன்றாவது பஸ் குண்டு வெடிப்புச் சம்பவம் இதுவாகும். கடந்த புதன்கிழமை நீர்கொழும்பு, குளியாப்பிட்டி ஆகிய இடங்களில் பஸ் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. இதில் 23 பேர் காயமடைந்தனர். (இ-6-21)

### ஏறாவூரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

காலை 9. 30 மணியளவில் குப்பை ஏற்றுவதற்காகச் சென்ற உழவு இயந்திரத்தை வழிமறித்த இருவர் துப்பாக்கியைச் காட்டி உழவு இயந்திரத்தை அதன் சாரதியுடன் கடத்திச் சென்றனர் என்றும்—

பின்னர் சாரதி விடுவிக்கப்பட்டு விட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

உழவு இயந்திரத்தைக் கடத்திச் சென்றவர்கள் வந்த சைக்கிளை தாம் மீட்டுள்ளதாக ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர். (இ-6-21)

### இரவு...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று முதல் அமுலுக்கு வந்த இந்த நடைமுறை காரணமாக புத்தளம் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவசர தேவை உள்ளவர்கள் மட்டும் இரவு 12 மணி வரை நடமாட அனுமதிக்கப்படுவர் என புத்தளம் பொலீஸார் அறிவித்துள்ளனர். (இ-ரி-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org